உ

கடவுள் துணை.

செந்தமிழ்.

தொகுதி ௨௨.] ரக்தாக்ஷி ௵ ஆனி ௴ [பகுதி ௮.

Vol. XXII. June-July-1924. No. 8.

தமிழரும் ஆந்திரரும்.*

[மு. இராகவையங்கார் எழுதியது.]

பரதகண்டத்தின் தென்பாகத்தில் உள்ள தேசங்களிலே, தமிழ் தெலுங்கு கன்னடம் என்ற பாஷைகள் வழங்கும் நாடுகள், பழமையும் பெருமையும் வாய்ந்தவை என்பது யாவரும் அறிந்தவிஷயம். ஒன்றையொன்று அடுத்துள்ள இத்தேசங்கள் அரசியலாலும் பாஷைவகையாலும் பூர்வகாலமுதலே சம்பந்தம்பெற்றிருக்கக்கூடியவையாதலால், 'அத்தொடர்புகள் யாவை' என்று அறிய முயல்வதில் நம்மவர்க்கு விருப்பமிருப்பது இயல்பேயாம். இவ் விருப்பமிகுதியே 'தமிழரும் ஆந்திரரும்' என்றவிஷயத்தை இம்மகாசபையில் உபந்யஸிக்கும்படி என்னைத் தூண்டியது. கன்னடபாஷையானது வளமும் பழமையும் வாய்ந்ததேயாயினும், தமிழ்நாட்டுடன் ஆந்திரதேசத்துக்கு அதிகத்தொடர்புண்மைபற்றியும் சுருக்கங்கருதியும், அவ்விரண்டுநாட்டார்க்கும் அமைந்த சம்பந்தத்தையே இன்று ஆராய்ச்சிக்கு எடுத்துக்கொள்ளலானேன். நம் சகோதரவகுப்பினராகிய ஆந்திரமக்களால் தமிழ்நாட்டவர் பூர்வத்தில் அடைந்த நன்மைகளும் உண்டு; ஆதலின் அவற்றை மறவாது எடுத்துரைப்பதற்குத் தமிழின் தலைமைக்களமாகிய இத் தமிழ்ச்சங்கத்

*இவ்வியாசம், மதுரைத்தமிழ்ச்சங்கத்தின் 22, 23-ம் வருஷக்கூட்டத்தில் தலைமைவகித்த வித்யாவிலாகாமந்திரியாகிய Hon. Sir. A. பாசுராமதாஸ் பாத்ரோ B. A., B. L., Kt., அவர்கள் முன்னிலையிற் படிக்கப்பட்டது.

தினுஞ் சிறந்த இடம் வேறுண்டோ? இவ்வாறு காரணமுங் களமும் அமைந்திருப்பதுடன் காலமும் பொருந்தியதாயுள்ளது. அஃதாவது, ஆந்திரதேச சம்பந்தமுடையவராய் இன்று சங்கக்கூட்டத்தின் தலைமை வகிக்கும் நம் வித்யாவிலாகா மந்திரியாரின் முன்னிலையில் இவ்விஷயத்தைப் பேசும்படி நேர்ந்திருப்பதேயாம். இனி, நான் தொடங்கிய விஷயத்துட் புகுவேன்.

பாஷாதத்துவநூலோர், திராவிடபாஷைகள் என்று பகுத்துள்ள தொகுதியுள், தமிழ் ஆந்திரம் கன்னடம் என்ற மூன்றும் ஓரினத்தைச் சார்ந்தவை என்பது, அறிஞரெல்லாம் ஒத்துக்கொண்ட முடிபாம். இவற்றுள், முதலிரண்டு மொழிகளுமே அதிகப் பழமைபாராட்டுதற்குரியவை. நூற்பெருமையால் கன்னடம் குறைவுடையதன்றேனும், அது, தமிழ் வடுகு என்ற இரண்டன்சேர்க்கையால் ஆனதொருபாஷை என்பதே தமிழ்முன்னோரின் கருத்தாகும். கி. பி. 11-ஆம் நூற்றாண்டினரும் கவிச்சக்கரவர்த்தி என்று மதிக்கப்பட்டவருமாகிய சயங்கொண்டார்—

"மழலைக்குறு மொழியிற்சில வடுகும்பல தமிழுங்
குழறித்தரு கருநாடியர் குறுகிக்கடை திறமின்"

என்று—சிறுபான்மை வடுகும் பெரும்பான்மை தமிழுங்கலந்தமொழியே கன்னடம் என—இக்கருத்தேபடக் கூறுவது காணலாம். இது, பழைய தமிழ்மக்கட்குக் கன்னடபாஷையைப்பற்றியிருந்த அபிப்பிராயம் இன்னதென்பதைக் காட்டுவதன்றோ? பழங்கன்னடத்தை (ஹள கன்னடம்) ஆராய்வோர்க்கு இதனுண்மை நன்குவிளங்கத் தடையில்லை. இனி, மலையாளபாஷையைத் தமிழின் குழவிமொழி என்பதே தக்கதாம். மேலைக்கடலையொட்டிய மலைநாடுமுழுதும் தமிழகத்தின் பழையபிரிவுகளுட் சேர்ந்ததாகவும், சில நூற்றாண்டுகட்குமுன்பெல்லாம் பாஷையாற் சிறிதும்வேறுபடாததாகவும் இருந்ததென்பது, மலையாளபாஷையிலுள்ள பழைய நூல்களாலும், அந்நாட்டுச் சிலாதாமிரசாஸனங்களாலும் தெளியப்பட்டது. இதுபற்றியே, கல்வியிற்பெரிய கம்பநாடரும், "வடகலை தென்கலை வடுகு கன்னடம், இடமுள பாடையா தொன்றி னுயினும்" என்று—தங்காலத்தே மலையாளம் தமிழின்வேறான பெரும்பாஷையாகக் கருதப்படாததைக் குறிப்பித்தலுங் காணலாம்.

இவ்வாறு, தமிழ் வடுகு கன்னடமொழிகள் ஒரு வகுப்பினவாயின், 'இவற்றுக்கு மூலமான தாய்மொழியாது' என்ற கேள்வி அடுத்து நிகழக்கூடியதே. இதற்கு யாவரும் ஒப்பக்கூடியவிடையை இப்போது பெறுதல் அரிதென்னலாம். 'திராவிடத்தொகுதியுள் தமிழே தாய் மொழியாகத்தக்கது' என்பது நம் நாட்டறிஞர்சிலர் அபிப்பிராயம். இப்பொழுது வழங்கும் தமிழ்நூல்களுள்ளே தொல்காப்பியமே பழமை யும் பெருமையும் உடையதென்பது யாவரும் அறிவர். அந்நூல், தமிழ்வழங்கும் நிலத்தைப் பன்னிரண்டுபகுதியாக்கி, அப்பன்னிரண் டுக்கும் புறம்பாகிய வடுகுமுதலிய நாடுகளிலிருந்து தமிழில் வழங்கும் பதங்களைத் திசைச்சொற்கள் என்று பகுக்கின்றது. தொல் காப்பியர்காலத்தவராகிய பனம்பாரனும் 'வடவேங்கடந் தென்குமரி யாயிடைத் தமிழ்கூறு நல்லுலகத்து' எனத் தமிழ்வழங்கும்நிலத்தை வேங்கடமலைக்கு அப்புறம் நிறுத்தினரில்லை. காக்கைபாடினியார் என்ற பழம்புலவரும் "வடதிசை மருங்கின் வடுகு வரம்பாக" என்று ஆந்திரபாஷை வழங்குநிலமே தமிழின்வடவெல்லையாகக்கொண்டார். இவற்றால் தொல்காப்பியனார் முதலிய முன்னோர்க்கு நெடுங்காலத் துக்கு முன்பே, தமிழும் வடுகுந் தனியே வேறுபட்டிருந்த பாஷைகள் என்பது தெளியப்படும். இப்போதுள்ள பழைய தமிழ்ப் பிரமாணங்களைக் கொண்டு நோக்குமிடத்து, வடுகுக்கும் தமிழினளவு பழமையுண் டென்றே சொல்லலாம்.

சங்ககாலத்துத் தமிழ்மக்கள் ஆந்திரரை வடுகர்* என்றும், அவர் மொழியை வடுகு என்றும் பெரும்பான்மை வழங்கிவந்தனர். அவ்வாறே ஆந்திரர் தமிழரை அரவர் என்றும், அவர் மொழியை அரவம் எனறும் வழங்கலாயினர். வடுகர் என்பதற்கு வடக்கிலுள்ளவர் என்பது பொரு ளாம். குடக்கிலுள்ளது குடகு என்பதுபோல, வடக்கிலுள்ளது வடகு என்றாகி, பின் வடுகு எனத் திரிந்தது. "வடதிசை மருங்கின வடுகு" (காக்கைபாடினியம்) "வடவடுகர்வாளோட்டிய" (புற. 378) என்ற பழந்தொடர்களிலே, வடுகு என்பது வடக்கடியாகப் பிறந்தது என்பது

*மத்தியகாலத்திலே தெலுங்கர் என்றும் வழங்கியதுண்டு; "சேனை மடி களங்கண்டு திகைத்து நின்றேந் தெலுங்கரேம்" என்று சயங்கொண்டார் பாடு தல் காண்க (கலிங்கத் 12. 158). பிற்காலத்தில் இவ்வடுகர் என்பதை ஆந்திர ரில் 'பலிஜர்' க்குத் தமிழர் வழங்குவர்.

குறிக்கப்படுதல் காண்க. தொல்காப்பியப்பாயிரங் கூறுமாறு, வேங்கட மலைக்கு வடக்கணுள்ளபூமி இவ்வடுகர்தேசமாகவே கடைச்சங்கநாளி லுங் கருதப்பட்டது. இதனை,

"ஒங்குவெள் ளருவி வேங்கடத் தும்பர்...
வானிணப் புகவின் வடுகர் தேஎத்து" (அகம், 213)

"புடையலங் கழற்காற் *புல்லி குன்றத்து
நடையருங் கானம் விலங்கி நோன்சிலைத்
தொடையமை பகழித் துவன்றுநிலை வடுகர்
பிழியார் மகிழர் கலிசிறந் தார்க்கும்
மொழிபெயர் தேஎய மிறந்தன ராயினும்" (ஷை. 295)

என்ற தொடர்களால் நன்கறியலாம். இவ்வடுகர் என்ற சொல்லைக் கன்னடரில் ஒருசாரார்க்குச் சிறுபான்மை தமிழ்மக்கள் வழங்கியதுமுண்டு; "வடுகர் பெருமகன் பேரிசை யெருமை......குடநாடு" (அகம் 115, 253) எனக் காண்க. இவ்வாறு ஆந்திரருங் கன்னடரும் வடுகர் என்ற பொதுச்சொல்லாற் சங்கநாளிற் கூறப்பட்டதுகொண்டு, அவ்விருவரும் அக்காலத்தே வேறன்றி ஓரினத்தவராயிருந்தனரென்றும், அவ்விருவர் பேசிவந்தபாஷையும் ஒன்றாய் வடுகு என்ற பெயர்பெற்றதாகல்வேண்டு மென்றும், பிற்காலத்தேதான் கன்னடம் பிரிந்து தனிமொழியாயிற் றென்றும் †அறிஞர்சிலராற் கருதப்பட்டுள்ளது. ஆனால்—

"கொங்கணர் கலிங்கர் கொடுங்கரு நாடர்" (சிலப். 25, 156).
"கொங்கணக் கூத்தருங் கொடுங்கரு நாடரும்" (ஷை. 26, 106)

எனச் சங்ககாலத்தவரான இளங்கோவடிகள், கன்னடமொழிபேசும் மக்களைக் கருநாடர் எனத் தனியே கூறுதலாலும்,

"கொங்கணங் கன்னடங் கொல்லந் தெலுங்கம்" (அகத்தியம்)
"கன்னடம் வடுகு கலிங்கந் தெலுங்கம்" (நன். 272 மயிலை.)

எனத் தமிழ்நாட்டைச்சூழ்ந்த நிலங்களிலே, கன்னடந் தெலுங்குகள் பயிலுநாடுகள் பிரித்தெண்ணப்படுதலாலும் முற்கூறிய அறிஞர் கொள்கை முடிவுடையதாகத் துணியக்கூடவில்லை.

---

*புல்லி குன்றம்—கள்வர்தலைவனாகிய புல்லிக்குரிய வேங்கடம்.

†The Tamils 1800 years ago, p. 29.

இனி, மைசூர்-ராஜ்யத்தின் வடபாகத்துக்கும், பல்லாரி அனந்த புரம்ஜில்லாக்களின்பகுதிகட்கும் படகநாடு என்ற வழக்குண்டு என்பது, அப்பக்கங்களிலுள்ள கன்னடர்க்கு படகவாரு, படகநாட்டிவாரு என்ற பெயர்கள் இன்றும் வழங்குவதால் விளங்குவதென்றும், இது வடுகநா டென்பதன் திரிபாமென்றும், அகநானூற்றில் நக்கீரனால்,

"நேரா வன்றோள் வடுகர் பெருமகன்
பேரிசை யெருமை நன்னாட் டுள்ளதை
அயிரியா றிறந்தன ராயினும்,, (253)

என்ற அடிகளிலே, வடுகர்பெருமகனான எருமையென்பவனுக்கு உரிய தாகவும், அயிரி என்ற நதியையுடையதாகவுங்கூறப்பட்ட குடநாடு என் பது இப்படகநாட்டைக் குறிப்பதென்றும், அயிரியென்பது அந்நாட்டி லோடித் துங்கபத்திரையோடு கலக்கும், அகிரிநதியே என்றும், பழைய மௌரிய ஏகாதிபத்தியத்தின் தெற்கெல்லையாயிருந்தது இப்படகநாடே என்பதற்கு அசோகசாஸனம் ஆங்குள்ளதே சான்றுமென்றும் தெரிய வருகின்றன.* இங்ஙனமாயின், தமிழ்நாட்டின் வடபாலுள்ள தெலுங்கரும், மேல்பாலுள்ள படகக் கன்னடரும் வடுகரென்று பொதுப் பட வழங்கப்பட்டனர் எனபது பெறப்படும்.

"குல்லைக் கண்ணி வடுகர் முனையது
*பல்வேற் கட்டி நன்னாட் டும்பர்
மொழிபெயர் தேஎத்த ராயினும்" (குறுந்தொகை, 11.)

என்ற மாமூலனார்வாக்கில், கட்டியென்பவனது நாட்டிற்குமப்பால் வடுகர் முனையையுடைய மொழிபெயர்தேயம் உள்ளதென்று கூறப்படுகின்றது. கட்டியரென்பவர் சங்ககாலில் வலிமைபெற்றிருந்த ஒருசார் சிற்றரசர்; †'பல்வேற்கட்டியர்'(சிலப் 25. 157; குறுந். 11), 'கங்கன்கட்டி'(அகம்.44),

---

*வடுகர் விஷயமாக நான் உசாவிவந்தபோது, சாஸனபரிசோதகரும் என் நண்பருமான ஸ்ரீ ஏ. ரங்கஸ்வாமி ஸரஸ்வதியவர்கள் B. A., இவ்வபிப்பிரா யங்களைத் தெரிவித்தனர். இவை, அறிஞரது ஆராய்ச்சிக்கு உரியனவேயாம்.

†'பல்வேற்கட்டி' என்ற பாடத்தை 'வல்வேற்காட்டின்' என்று கொண்டு பழவேற்காட்டைத் தமிழ்நாட்டெல்லையாகச் சரித்திர மெழுதிசசெல்வாரும் உளர். 'பல்வேற்கட்டியர்' (சிலப். 25. 157) என்றதொடர் முன்னூலிற் பயில்வ தோடு, கட்டியர் என்றவர் தமிழ்நாட்டினெல்லைப்புறத் தாண்டவராக நூல்களிற் காணப்படுவதாலும், யான்கூறிய* பாடம் ஏடுகளிற்கண்டதாதலாலும், அதுவே கொள்ளத்தக்கதென்க.

'போரடுதானைக்கட்டி' (ஷை 226.) என்ற பழந்தொடர்கள் காண்க. விஜயநகரவரசர்காலத்தும் அதன்பின்பும் கட்டிமுதலியார்கள் என்று பிரபலராய் விளங்கிய தலைவர்கள் இக்கட்டிமரபினராகவே கருதற்பாலர். இன்னோரது ஆட்சிக்குட்பட்ட நாடு தமிழ் கன்னட தேசங்களினிடைப்பட்ட சேலம்ஜில்லாவிற் பாதிக்குமேற்பட்டிருந்தது. மற்றும் இவர் வரலாறுகள் சரித்திரநூல்களால்* அறியத்தக்கன. தமிழ்நாட்டெல்லையில் இக்கட்டிநாடுள்ளதாக மாமூலனார் கூறியவாறே, அவர் மரபினரான கட்டிமுதலியார்நாடும் பிற்காலத்தமைந்திருந்தமை அறியத்தக்கது. இக்கட்டிநாட்டுக்கும் அப்பாலுள்ளதாகக் குறுந்தொகை கூறும் வடுகர்முனையென்பது, மேற்கூறிய படகர்நாட்டைக் குறிப்பதாகவே கொள்ளவிடமுண்டு.

"கல்லா நீண்மொழிக் கதநாய் வடுகர்" (அகம் 107.)
"கடுங்குரற் பம்பைக் கதநாய் வடுகர்" (ஷை)
"கற்றுரிக் குரம்பைக் கதநாய் வடுகர்" (ஷை)

எனச் சங்கச் செய்யுள்களினும்,

"வடுக வேடுவர்......ஆறலைக்குமிடம்" (முருகன் பூண்டித்தேவாரம்.)
"வடுகர்வாழ் முருகன் பூண்டி" (ஷை.)

எனச் சுந்தரமூர்த்திநாயனாரால், கொங்குநாட்டுத் திருமுருகன்பூண்டித் தேவாரத்துங் கூறப்பட்டவர்கள், இப்படகநாட்டுள்ள அல்லது அங்கிருந்து வந்தேறிய கன்னடவேடராகவே கருதத்தகும். வேம்பத்தூரார்திருவிளையாடலில், மூர்த்திநாயனார்காலத்து மதுரையை வென்று கைப்பற்றிய சமணவரசனை, 'கருநாடர் மன்னன்" என்று கூறிய அதனாசிரியர், அவனையே மற்றோரிடத்து "வடுகவேந்தன்" என்று பாடுகின்றார்.† இதுவும் மேற்கூறியவற்றோடு சேர்த்து ஆராயற்பாலது. இப்போது நீலகிரியில் வாழும் படகர் என்ற கூட்டத்தார் மைசூரின் வடபாலினின்று ஆங்கு வந்தேறியவராகச் சொல்லப்படுதலால்‡ அவரும் இப்படகநாட்டவரேயாதல்வேண்டும்.

---

*Gazetteer of Salem District, Vol. I, p 69; Vol. II p. 262-69.

† 'பஞ்சவற்றுரந்து, மதுரை வவ்விய கருநடவேந்தன்' எனக் கல்லாடத்து (57) கருநடவரசனாகவே கூறப்பட்டுள்ளது.

‡ Gazetteer of Nilgiri District p. 128.

தமிழகத்தைச் சூழ்ந்த நிலங்களிலே, கன்னடம் வடுகு தெலுங்கம் என்பவை தனித்தனி நாடுகள் என்று நச்சினார்க்கினியரும் (தொல். சொல். 400 உரை), நன்னூற் பழையஉரைகாரரும் (272 மயிலை. உரை) கூறுகின்றனர். இவ்வாறு தெலுங்குநாட்டின் வேறாக வடுகநாடென்று எண்ணப்படுவது, மேற்கூறிய படகநாட்டைக் கருதியதாகக் கொள்ளலாம். அன்றேல், ஆந்திரதேசத்தின் வடபாகம் தெலுங்கம் என்றும், அதன் தென்பாகம் வடுகு என்றும்—செந்தமிழ்நாடு, கொடுந்தமிழ்நாடு என்ற தமிழகப் பகுப்புப்போல—ஆந்திரமும் இருவேறாகத் தமிழரால் முற்காலத்து வழங்கப்பட்டது என்று கருதல்வேண்டும். எவ்வாறாயினும், பிற்காலத்துத் தமிழ்மக்களெல்லாம் அவ்வேறுபாடு சிறிதுங் கருதாது, ஆந்திரபாஷையையும் அதன் மக்களையுமே, வடுகு வடுகர் என்ற சொற்களால் வழங்கிவரலாயினர்;

> "சிலவடுகும் பலதமிழுங் குழறித்தரு கருநாடியர்" (கலிங். பரணி).
>
> "வடகலை தென்கலை வடுகு கன்னடம்" (கம்பர்)
>
> "கருநாடகச் சந்தமும்.........வடுகச் சந்தமும்" (யாப். வி.)
>
> "வடுக ரருவாளர் வான்கருநாடர்" (நன். மயிலை).

என்ற தொடர்களால், தெலுங்கும் வடுகும் வேறல்ல என்பது தெளிவாதல் காண்க.

இனி, வடுகர் என்ற பெயரை ஆந்திரமக்கள் தங்கட்குள் வழங்கினவர் என்பதற்கு ஆதாரங் கிடைக்கவில்லை. அவ்வாறே, அரவர் என்ற பெயரைப் பழைய தமிழ்மக்கள் தங்கள் பெயராக வழங்கினரில்லை. ஆனால் 300-ஆண்டுகட்குமுன்னிருந்த அகராதிநிகண்டு நூலார் மட்டும், இச்சொல்லை 'அரவரென்பது தமிழராகும்' என்று எடுத்தாண்டனர். அரவம் என்ற வடசொற்கு, ஒலி என்பது பொருளாயிருத்தல் கொண்டு, ஆந்திரர்க்குத் தமிழ் வெற்றொலியாகவே கேட்கப்பட்டமை பற்றி அதற்கு அப்பெயர் வழங்கலாயிற்று என்று தெலுங்கர் சிலர் பொருள் கூறுவதுண்டு. இது விநோதமான விற்பத்தியேயாகும். பழைய ஆந்திரர் தமிழர்க்கு வழங்கிவந்த பெயர் அருவர் என்பதேயன்றி அரவர் என்பதன்று. கலிங்கத்துப்போரிலே அந்நாட்டுச் சேனைகள் சோழர்படையைக்கண்டு 'தமிழர்! தமிழர்!!' என்று கதறிநடுங்கியது என்பதைக் கூறவந்தவிடத்தே, சயங்கொண்டார்—

"அருவர்! அருவர்!!' என விறைஞ்சினர்
அபய மபய மெனாக டுங்கியே"

என்று பாடுகின்றார். இவ்வாறே, சோழர் நடத்திய அப்பெரும் போரைப்பற்றிய பழைய வெண்பாவொன்றும்,

"ஒருவ ரொருவர்மேல் வீழ்ந்து வடநாடர்
அருவ ரருவரேன வஞ்சி—வெருவந்து
தீத்தீத்தீ என்றயர்வர் சென்னி படைவீரர்
போர்க்கலிங்க மீதெழுந்த போது."

என்று தண்டியலங்காரத்தில் மேற்கோள் காட்டப்பட்டுளது. இப்பிரமாணங்களிலிருந்து, அருவர் என்பதே ஆந்திரர் தமிழர்க்கு வழங்கிய பழைய பெயரென்பது வெளியாம். தெலுங்கு தேசத்தை ஒட்டியுள்ள தமிழகத்தின் பகுதிகள், அருவா, அருவாவடதலை என்ற நாடுகளாம். இந்நாட்டாரை அருவாளர் என்பது பழைய தமிழ்வழக்கு. தம் பக்கத்து வாழும் தமிழாகிய இவ்வருவாநாட்டாரையே, வடுகர் முதலில் அருவர் என வழங்க, அதுவே தமிழர்க்கெல்லாம் உரிய பொதுப்பெயராக வழங்கலாயிற்று என்று, அச்சொற்கு உற்பத்திப் பொருள்கொள்வதே நேரானது என்று கொள்க.

இனி, தமிழரும் வடுகரும் முற்காலத்தும் பிற்காலத்தும் எவ்வகைத் தொடர்புகொண்டிருந்தனர் என்பதை நோக்குவோம். இத்தொடர்பை மூன்றுபகுதியாகக்கொண்டு ஆராய்ச்சிசெய்தல் தகும். முதலாவது—தமிழரும் ஆந்திரருந் தம்முள் அதிக மாறுபாடுகொள்ளாது வாழ்ந்த காலமாகும். இரண்டாவது—தமிழர் ஆந்திரரின் மேம்பட்டு ஆண்ட காலமாம். மூன்றாவது—ஆந்திரர் தமிழரைமேற்பட்டு ஆண்ட காலமாகும்.

இவற்றுள், முதற்பகுப்பு, சங்ககாலத்துக்கு உரியது. சங்கச் செய்யுள்கள் என்றுவழங்கும் பழைய தமிழ்நூல்களை ஆராய்வோமாயின் தமிழகத்தின் எல்லைப்பக்கங்களிலே சிறு கலகங்கள் நடந்திருக்கக்கூடுமேனும், பெரும்பகைமை அவர்க்குளிருந்ததாகவேனும், அதனாற் பெரும் போர்கள் விளைந்தனவாகவேனும் வெளியாகவில்லை.

"முரண்மிகு வடுகர் முன்னுற மோரியர்
தென்றிசை மாதிர முன்னிய வரவிற்கு" (அகம், 281)

"சோழர் பெருமகன்... இளம் பெருஞ் சென்னி
செம்புறழ் புரிசைப் பாழி நூறி
வம்ப வடுகர் பைந்தலை சவட்டி" (ஷை. 375)

என்ற தொடர்களிற் கூறப்பட்ட வடுகர், மௌரியர் நன்னன் என்பவர்க்குத் துணையாகவந்த படகநாட்டுக் கன்னடராகத் தோற்றுகின்றனரேயன்றி, ஆந்திரநாட்டவராகத் துணியக்கூடவில்லை. இனித் தமிழரசராகிய சேரசோழபாண்டியர் மூவரும், வடவேங்கடந் தென்குமரிக்கு உட்பட்ட நிலத்தைத் தாண்டி, வேற்றுமொழி பயிலும் நாடுகளைத் தங்கீழ்ப்படுத்தியாளச் சிறிதும் எண்ணங்கொண்டவர்களல்லர். 'தமிழ் கூறுநல்லுலகமே' தங்கள் தேசம் என்ற அபிமானம் அவர்க்குள் மிகுந்திருந்தமையால், அந்நியபாஷை வழங்கும் நிலப்பகுதிகளைத் தமிழகத்துடன் கலப்பதில் அவர்கள் வெறுப்புக்கொண்டவராயிருந்தனர் என்றே சொல்லலாம்.

"நெடியோன் குன்றமுந் தொடியோள் பவ்வமுந்
தமிழ்வரம் பறுத்த தண்புன னன்னாட்டு" (சிலப்)

"வண்புகழ் மூவர் தண்பொழில் வரைப்பின்" (தொல்)

"தமிழ்கெழு மூவர் காக்கும்
மொழிபெயர் தேஎத்த பன்மலை யிறந்தே" (அகம்)

"பனிபடு சோலை வேங்கடத் தும்பர்
மொழிபெயர் தேஎத்த ராயினும்" (ஷை)

"கட்டிநன்னாட் டும்பர்
மொழிபெயர் தேஎத்த ராயினும்" (குறுந்)

எனவருந் தொடர்கள் இக்கருத்தையே குறிப்பிடக்கூடியன. ஆனால், அந்நியரான வடவேந்தர் தமிழ்நாட்டுட்புக முயன்றகாலங்களிலே, தமிழ் மூவேந்தரும் ஒருங்குதிரண்டு, தமிழகத்தில் அவர்களைத் தலைநீட்டவுமுடியாமற் றடுத்துவந்தனர். அதனால், திக்குவிசயஞ்செய்து போராற்றல்வாய்ந்திருந்த வடவரசர்க்கும் தமிழ்நாடு என்றால் விலகிநிற்க வேண்டியதாயிற்று. பாரதகண்டம் பெரும்பான்மையும் ஒருகுடைக்கீழ் வைத்தாண்ட அசோகசக்கரவர்த்திகாலத்தும் தமிழராற்றல் ஓங்கியிருந்ததென்பது, அவ்வரசர்பெருமான் தமிழ்மூவேந்தரையுந் தன்னோடொத்தவராகக்கருதி நட்புமுறையில் அவர்களிடந் தூதர்களை அனுப்பிப்

போந்த செய்தியால் தெரியலாம். மௌரிய ஏகாதிபத்தியம் தமிழகத்தின் எல்லைக்குமப்பால் மைசூர்ப்பிராந்தியத்தை ஒட்டியிருந்தது என்ற விஷயமும் அறியத்தக்கது. பிற்காலத்தே பிரபலம்பெற்றெழுந்த குப்த-ஏகாதிபத்தியமும் தமிழ்நாட்டைத் தன்னுட்கொண்டதாகவில்லை. ஆகவே, சங்ககாலத்தே, தமிழ்வேந்தர், பாஷை நடைமுதலியவற்றால் வேற்றுனமக்களை அடக்கியாள முயலாததோடு, தம் நாட்டில் அந்நியர் பிரவேசிக்கவும் இடங்கொடுத்திலர் என்ற விஷயந் தெளிவாயிற்று. அங்ஙனமே, அக்காலத்து வடுகரசரும் தமிழ்நாட்டை ஆளமுயன்ற செய்திக்குச் சங்கநூல்களிலும் ஆந்திரத்திலும் ஆதாரங்காணப்படாமையால், அவர்களும், முற்காலத்தே தமிழருடன் அமைதிபெற்றிருந்தவரென்றே சொல்லத்தடையில்லை.

இங்ஙனமிருந்த தமிழர்-வடுகர் நிலைமை, சங்ககாலத்துக்குப்பின்பே மாறுவதாயிற்று. இம்மாற்றத்திற்குக் காரணமும், அவ்விருவருமன்றி, வடக்கிலிருந்து படையெடுத்துவந்த வேற்றரசரேயாவர். பல்லவர் சளுக்கர் என்ற வடவேந்தர், ஆந்திரங் கன்னட முதலிய தேசங்களை வென்றடிப்படுத்திய காலங்களில் அவர்கள் பேராசை தமிழ்நாட்டையும் கவர்ந்தது. அதுமுதலே தமிழர்க்கும் வடவர்க்கும் தமிழகத்திலும் பிறவிடங்களிலும் நடந்த போர்ச்செய்திகள் மிகுதியாகக் கேட்கப்படுகின்றன. இறையனார்களவியலுரையிற்கண்ட பாண்டிக்கோவைப்பாடல்களும், ஆழ்வார்முதலியோர் பாசுரங்களும், சிலா தாமிர சாஸனங்களும் இச்செய்திகளை விளக்கக்கூடியன. பல்லவர் தமிழ்நாட்டில் வேரூன்றிய காலத்தில் அவர்க்கும் வடுகர்க்கும் நடந்த போர்களுமுண்டு.

"முலைபொழி தீம்பால் மண்சேறு படுப்ப
மலர்தலை யுலக மோம்பு மென்ப
பரிசிலைத் தொண்டைப் பல்லவ னாணையின்
வெட்சித் தாயத்து வில்லே ருழவர்
பொருந்தா வடுகர் முனைச்சுரங்
கடந்து கொண்ட பல்லா நிரையே." (தொல். பொ. 55, நச். உரை.)

என்ற பழையபாட்டில் 'தொண்டைநாடாண்ட பல்லவனுடையசேனை, பகைவாகிய வடுகரது போரிலே கவர்ந்துவந்த பசுக்கூட்டங்கள், உலகத்தை ஊட்டிக் காக்கக்கூடியவை' என்ற கருத்துப்படப் பாடப்

பட்டிருத்தல், மேற்கூறிய போர்ச்செய்தியைக் காட்டும். இப்பல்லவரைப் போலவே, சளுக்கியவேந்தரும் பின்பு ஆந்திரதேசத்தில் வேங்கிநாட்டில் தம் அதிகாரத்தைத் தாபித்து, ஆந்திரரென்று சொல்லும்படி ஆயினர். இவர்களுடன் பெரும்போர்களைச் சோழர்கள் தெலுங்குதேசத்திலே சென்று நடத்தவேண்டியதாயிற்று. முதல் இராசராசன், முதல்இராசேந்திரன் முதலிய சோழர்கள் நடத்திய அப்போர்விவரங்கள் சாஸனங்களால் தெரியவருகின்றன. இவ்வாறு நடந்த போர்களொன்றில், வீர ராஜேந்திரன் என்ற சோழன், வேங்கிநாட்டை வென்று விஜயாதித்தன் என்ற சளுக்கரசனுக்கு அளித்துதவினன் என்று சரித்திரத்தால் அறியப்படுகின்றது.* வீரசோழியவுரையில்—

"வேங்கை வளநாடன் விசயவா டைக்கதிபன்
ஒங்கு புகழுதயா தித்தனுக்குத்—தாங்குகடல்
நேராமென் றூலு நிறத்தா லவன்செய்யன்
காரார் நிறமக் கடல்."

என்ற பழஞ்செய்யுளொன்று உதகரிக்கப்பட்டுள்ளது. இதனிற் குறிக்கப்பட்டவரசன், மேற்கூறிய உதவிபெற்ற விஜயாதித்தனே அன்றி, வேறொரு சளுக்கரசனே ஆதல்வேண்டும்.

இனி, சோழர்க்கும் வேங்கியரசரான சளுக்கர்க்கும் நடந்த இப்போர்களினின்றும் மற்றொரு விசேடமும் ஏற்பட்டது. அஃதாவது—சோழர்கள் தங்கள் பெண்களை அச்சளுக்கியர்க்கு மூன்று தலைமுறைகளாக மணம்புரிவித்து இருவரும் உறவுகொண்டாடிவந்ததேயாகும். கீழைச்சளுக்கியரில் முதல்வனாகிய விமலாதித்தன் என்பவன் (கி. பி. 1015–1022) முதல் இராஜராஜசோழன்மகள் குந்தவையையும், அவன்மகன் சளுக்கிய ராஜராஜநரேந்திரன் என்பவன் (1022—1061) கங்கைகொண்டசோழன்மகள் அம்மங்கதேவியையும், மேலைச்சளுக்கியரில் விக்கிரமாதித்தன் என்பவன் வீரராஜேந்திரசோழன்மகளையும் மணம்புரிந்துகொண்டவர்களென்பது தெரியவருகிறது.† இத்தகைய சம்பந்தங்களால் ஆதியிற் பகைமைகொண்டிருந்த அவ்வரசரிருவரும் சமாதானம் பெறலாயினர். அன்றியும், இக் கீழைச்சளுக்கிய சம்பந்த

*சளுக்கிய விக்கிரமாதித்தன் சரித்திரம், பக். 25.

† Ibid p. 25.

மானது, முடிவில், ஆந்திரதேசத்தையே தமிழரது உரிமைநாடாகவும் ஆக்கிவிட்டதென்பது இங்கு அறியத்தக்கது. எவ்வாறெனில்—முற் கூறியவாறு, இராஜேந்திரன்மகள் அம்மங்கதேவியை மணம்புரிந்து கொண்டு ஆந்திரதேசத்தை ஆண்டுவந்த சளுக்கிய ராஜன் கி. பி. 1062-ல் இறந்ததும், அவன்மகன் இராஜேந்திரன் என்பவன் அந்நாட்டுக்கு அரசனாயினன். அப்போது, சோழராஜ்யத்துக்கு வமிசமின்றிக் குழப்பம்நேரவே, தானே அந்தராஜ்யத்துக்குத் தெளகித்திரபாத்தியங் கொண்டாடி அதனைக் கைப்பற்றிக்கொண்டு சோழசிம்மாஸனத்தில் கி.பி. 1070ல் ஏறினன்*. அதனால் தமிழ்நாடுகளையெல்லாம் உள்ளடக்கிய சோழ ஏகாதிபத்தியத்துக்கும் ஆந்திரதேசத்துக்கும் இவன் அதிபதியானன். இவனே—அபயன், விஜயதரன், குலோத்துங்கன் முதலிய பெயர்கள் பெற்ற சோழன். தந்தைவழியால் சந்திரகுலத்துச் சளுக்கியவமிசத்தவனாகவும், தாய்வழியால் சூரியகுலத்துச் சோழவமிசத்தவனாகவும் இவன விளங்கினமையால், 'உபயகுலோத்தமன்' என்றும்,

"இருண்முழுது மகற்றும்விது குலத்தோன் றேவி
யிகல்விளங்கு தபனகுலத் திராச ராசன்
அருடிருவின் றிருவயிற்றில் வந்து தோன்றி
ஆலிலையி லவதரித்தா னவனே மீள"

"திங்களி னிளங்குழவி செம்மலிவ னென்றும்
செய்யபரு திக்குழவி யையனிவ னென்றும்
தங்களின் மகிழ்ந்திரு குலத்தரசர் தாமும்
தனித்தனி யுவப்பதோர் தவப்பயனு மொத்தே".

என்றும் இவன்காலத்துப் புலவர்பெருமக்களாற் புகழ்ந்துகூறப்படுவன். இக்குலோத்துங்கன் பெருவீரனானமையால் தெற்கிலும் வடக்கிலும் பல தேசங்களைவென்று பகையரசரெல்லாம் நடுநடுங்கும்படி செய்துவந்தான். ஒருகால், கலிங்கநாட்டரசனான சோடகங்கன் என்ற அனந்தபதுமன் தனக்குரிய திறையைக் கொடுக்க மறுத்தமைபற்றித் தன்சேனாபதியாகிய கருணாகரத்தொண்டைமானைக்கொண்டு அக்கலிங்கத்தின் மேற் படையெடுத்துவென்று அதனைத் தன்கீழ்ப்படுத்தினான். இப் பெரிய வெற்றியே, சயங்கொண்டார் என்ற புலவர்பெருமானியற்றிய

* Ibid. p. 31, 32.

கலிங்கத்துப்பரணி என்ற நூலாற் சிறப்பித்துப் பாடப்படுவது. தன் மகன் வீரசோழன் விக்கிரமசோழன் என்பவர்களை வேங்கிநாட்டின் பிரதிநிதிகளாகவைத்துத் தான் கங்கைகொண்டசோழபுரத்திலிருந்து சோழ ஏகாதிபத்தியத்தை ஆட்சிபுரிந்துவந்தனன். இவன் கி.பி. 1117-ல் இறந்ததும், இவன்மகன விக்கிரமசோழன் பட்டமடைந்தான். இவன்காலத்தும் இவன்மகன்--இரண்டாங்குலோத்துங்கன், பேரன்-இராசராசன் II காலங்களிலுமே, ஒட்டக்கூத்தர், சேக்கிழார், கம்பர், புகழேந்திபோன்ற பெரும்புலவர்கள் விளங்கினர். இவ்வரசரெல்லாம் தமிழ் ஆந்திரமென்ற இரண்டுதேசங்கட்கும் அதிபதிகளாக ஆட்சிபுரிந்தவர்களே. இவர்களாட்சியில், சோழவமிசத்தைச்சேர்ந்த தலைவர் பலர் ஆந்திரதேசங்களிற் பிரதிநிதிகளாய் அமைய, அவ்வமிசத்தவர், வெலநாண்டுச்சோழர், போத்தப்பிச்சோழர் முதலிய பெயர்களுடன் ஆந்திர தேசப்பகுதிகளை ஆண்டு முடிவில் ஆந்திரர்களாகவே ஆனார்கள். இவர்களைப்பற்றிய ஆந்திர நூல்களும் உண்டென்பர்.

மேலும், இக்காலத்துத் தமிழ்ப்புலவர்கட்கு ஆந்திர நூல்களில் ஆராய்ச்சியுமிருந்தது. உத்தேசம் 10, அல்லது 11ம் நூற்றாண்டில் இயற்றப்பட்டதாகச் சொல்லக்கூடிய யாப்பருங்கலவிருத்தி என்ற அரிய பெரிய உரைநூலிலே ஆந்திரபாஷையிற் பழைமையாக வழங்கிவந்த யாப்பிலக்கணநூலொன்று எடுத்துக்காட்டப்பட்டுள்ளது. இதனை, அவ்விருத்திநூலுள்—"இவற்றை யெல்லாம்...குணகாங்கி* என்னுங் கருநாடகச் சந்தமும், வாஞ்சியார்செய்த வடுகச்சந்தமும் ஆகியவற்றுள்ளும், மாபுராணமுதலாகிய தமிழ்நூலுள்ளும் புகுதியுடையார்வாய்க் கேட்டுக்கொள்க." எனவரும் வாக்கியத்தால் அறியலாம். இதனால், கன்னட ஆந்திரபாஷைகளில் அமைந்த யாப்புநூல்களிலும் பண்டைத் தமிழ்ப்புலவர்க்கு ஆராய்ச்சியிருந்தமை புலப்படுகின்றதன்றோ? வடுகச் சந்தநூல்செய்தவர் வாஞ்சியார் என்று அச்சுப்பிரதியிற்காணப்படுகின்றதாயினும், எட்டெழுத்துமுறையில் "அவாஞ்சியார் செய்த வடுகச்சந்தமும்" என்றும், படிக்கக்கூடியதாகின்றது. தக்க தெலுங்குப்பண்டிதர்களை விசாரித்தவளவில், இத்தகைய பெயருடைய ஆந்திராசிரியரையும்

*'குணகாங்கியம் என்னுங் கருநாடகச் சந்தமே போலவும்' என்று, யாப்பருங்கலக்காரிகையுரையிற் காணப்படுகின்றது.

அவர் நூலையும்பற்றி ஒன்றும் இப்போது தெரியவரவில்லை. ஆந்திர பாஷையில் மிகப்பிராசீனமான யாப்புநூலொன்றிருந்தது என்ற அரிய செய்தி 11-ம் நூற்றாண்டுத் தமிழ்மக்களது எழுத்திலிருந்து வெளியாவது, ஆந்திரமக்கள் அறிந்து மகிழத்தக்கதாம். எப்போது ஒருபாஷை யாப்பிலக்கணத்தைப் பழமையாகவே கொண்டுள்ளதோ, அப்போதே இலக்கியவளத்தையும் அது பெற்றிருந்திருக்கவேண்டுமென்பது திண்ணம். நன்னயபட்டர்க்குமுன்பு வழங்கிய தெலுங்குநூல்கள் காணப்படாமையால், அப்பாஷை, அவர் காலமாகிய 11-ம் நூற்றாண்டுக்கு முன்பு இலக்கியவிலக்கணவளம் பெற்றிருந்ததில்லை என்று கருதப்படுவதற்கு இடமில்லை என்பது இதனால் விசதமாகக்கூடியது. இது நிற்க.

மேற்கூறிய விஷயங்களால், திராவிட ஆந்திரதேசங்கள், சோழர் பிராபல்யமிகுந்திருந்த இரண்டு நூற்றாண்டுகள்வரை இராஜாங்கசம்பந்தத்தால் பின்னிக்கிடந்தன என்பது விளங்கியது. 'வடுகரசர்க்குச் சிறந்தார் சோழியவரசர்' என்று இலக்கணநூல்களில் அடிக்கடி பயிலுந் தொடர், சோழர் ஆந்திரரின்மேம்பட்டு விளங்கிய இக்காலத்தெழுந்த வாக்கியமாகவே கொள்ளத்தக்கது. இந்நிலைமை 12-ம் நூற்றாண்டுமுடிய நின்றது. 13-ம் நூற்றாண்டிலே, சோழரது வலிமைகுன்றவே, ஆந்திர தேசமும் பிறவும் அவர்கள் கைவிட்டு நழுவுவனவாயின. இவ்வாறுவதற்குக் காரணம் மேற்கே ஓரங்கல் (Warangal) நாட்டில் காகதீயவரசர் வலிமைபெற்றோங்கியதேயாகும். இவர்களில் முதற்பிரதாபருத்திரன் என்பவன் (1162–1197) மிகப்பிரபலனாய்ச் சோழராட்சிக்கு உட்பட்டிருந்த வேங்கிநாட்டைத் தன்குடைக்கீழ்க் கொண்டுவந்தான். இவன் காலத்துச்சோழன், முதற்குலோத்துங்கனுக்குக் கொட்பேரனான இராசராசன் (II) என்பவன். இவன் நாளில்தான் கம்பநாடர் என்ற கவிச்சக்கரவர்த்தி விளங்கினர். எக்காரணத்தாலோ இப்புலவர்க்கும் இராசராசனுக்கும் பின் கடும்பகை முற்றியதென்றும், அதனால் அச்சோழனுடன் கோபித்துக்கொண்டு, கம்பர் சோணாட்டைவிட்டகன்று, மேற்கூறிய பிரதாபருத்ரனைக்கொண்டு அவனையடக்கவெண்ணி, அவனிடஞ் சென்றனரென்றும் தெரியவருகின்றன. "கம்பர் பிரதாபருத்ரனிடத்திற்போய் அவன் அடைப்பைகட்டிவரப் பாடியவெண்பா" என்ற தலைப்புடன் உள்ள பழைய செய்யுளொன்று தமிழ்நாவலர்சரிதையிற் காணப்படுவது வருமாறு:—

"அவனிமுழு துண்டு மயிரா வதத்தன்
பவனி தொழுவார் படுத்தும்—புவனி
உருத்திரா நின்னுடைய வோங்க னாட்டிற்
குருத்திரா வாழைக் குழாம்."

'பூமியிலுள்ளாரெல்லாம் வந்துண்ணுவதாலும், அயிராவதம் போலும் பட்டத்தியானையின்மேல் நீ பவனிவரும்போது உன்னைப் பார்த்த பருவமாதர்கள் காமவெப்பம் ஆற்றாமற் குளிர்ச்சிக்காகப் பரப்பிப் படுத்தலாலும், அரசே! உன்னுடைய நாட்டில் வாழைகள் குருத்தில்லாமற்போயின' என்பது இதன்பொருள். 'வாழைகள் குருத்தில்லாமற் போயின' என்று தக்கசந்தர்ப்பமொன்றிற் கொடுக்கப் பட்ட ஸமஸ்யையைச் சமயோசிதமாகப் பாடிமுடித்துக் கம்பநாடர் அப்பிரதாபருத்திரனை மகிழ்வித்தனரென்பது இதனால் புலப்படு கின்றது. இவ்வாறு வலிமை பெற்ற ஆந்திரவேந்தனிடஞ் சென்று தம் பெரும்புலமையால் அவனை வசப்படுத்தி அழைத்துவந்து சோழன் முன் அவன் தனக்கு அடைப்பைகட்டிநிற்கும் பெருநிலைமையைக் காட்டித் தம்மாற்றலைப் புலப்படுத்தினர் அப்புலவர்பெருமான் என்பது தெரியலாம். ஆயின் இங்ஙனஞ் செய்த புலவரைப்பற்றி எத்தகைய வெண்ணம், சோழன் கொண்டிருத்தல்கூடும்? அப்புலவரால் தனக்குப் புகையரசன் விளைக்குங் கேடு திண்ணம் என்பதை அறிந்த அவன், கம்பநாடரைக் கொல்லக் காலம்பார்த்துக்கொண்டே, அவரிடம் நட்புடையவன்போல நடித்துவந்தான். அதனை உண்மையாகக் கருதிச் சோழனுடன் பழகிவந்த கம்பர் ஒருகால் அரண்மனைக்குட் புகுந்தபோது அவன் அவ்விடத்துக் கட்டப்பட்டிருந்த புலியொன்றை அவிழ்த்து விடச்செய்ய, அஃது அவர்மேற் பாய்ந்துவந்தநிலையிலே அவன் அப்புலியை எய்பவன்போலக் கம்பரையே தன்னம்பால் எய்துவீழ்த்தித் தன் பகைமையைத் தீர்த்துக்கொண்டனன். அம்புபாய்ந்து வீழ்ந்த அப்புலவர்பெருமான், உள்ளநிகழ்ச்சியை அறிந்துகொண்டு, சோழனை நோக்கி,

"வில்லம்பு சொல்லம்பு மேதகவே யானாலும்
வில்லம்பிற் சொல்லம்பு வீறுடைத்து—வில்லம்பு
பட்டுருவிற் றென்னைவென் பாட்டம்பு நின்குலத்தைச்
சுட்டெரிக்கு மென்றே தெளி."

என்று சபித்துப் பாடினர். தெய்வப்புலவராகிய இவர்வாக்கின்படியே, சோழவமிசம், இவ்விராசராசனுக்குப்பின்பு, வலிகுன்றிச் சிலதலைமுறைகளுள் நிலைகுலைந்ததென்பதைச் சரித்திரபூர்வமாக நாம் நன்கறியலாம். பிரதாபருத்திரனைக் கம்பர் தம் வாக்குவன்மையால் வசப்படுத்தி அவன் தமக்கு அடைப்பைகட்டிவரச்செய்த செய்தியையே, சேரனைக்கொண்டு அவர் அவ்வாறு செய்வித்ததாகவும், அம்புபட்டிறந்தவன், கம்பரன்றி அவர்மகன் அம்பிகாபதி என்றும் இக்காலத்தார் மாற்றிக் கதைபெழுத அவையே இப்போது உண்மைச்செய்திகள்போல வழங்கிவருகின்றன. இது நிற்க. மேற்கூறிய சரித்திரத்தினின்றும், தமிழ்ப்பெரும்புலவர்களையும் ஆந்திரவரசர் ஆதரித்துப் பெரிதுங் கௌரவித்துவந்தசெய்தி நன்கு விளங்கும். கம்பநாடர் பிரதாபருத்திரனிடஞ் சென்றுவந்தன ரென்பதற்கு ஏற்ப, அவரருளிச்செய்த இராமாவதாரமென்று பெயர் கொண்ட இராமாயணத்திலே,

"தாண் மிடைந்தன தம்மி மிடைந்தென"
"அக்கட விராவணற் கமைந்த வாற்றலே"
"மசரத மனையவர் வரமும் வாழ்வும்"

எனவருந் தொடர்களில் தம்மி (=தாமரை), அக்கட (=இரக்கக்குறிப்பு) மஸ (=மாயை, பொய்; மசரதம்—பொய்த்தேர், கானல்) என்ற தெலுங்குச்சொற்களை அப்புலவர் பிரயோகித்தல் அவர் தெலுங்கருடன் பழகி வந்தவரென்பதைக் குறிப்பிக்கக்கூடியதன்றோ?

இனிச் சோழர் ஆதிக்கங்குன்றிய இரண்டுமூன்று நூற்றாண்டுகட்குப்பின்பு, தெலுங்கர் தமிழரைக் கீழ்ப்படுத்தியாண்ட காலவிசேடத்தைக் காணலாம். சோழர் ஆதிபத்தியத்தின்கீழ் அமைந்த சிற்றரசர்களும் தலைவர்களும், அத்தலைமையரசாங்கம் நிலைகுலையவும் தாமே பெரியவுஞ் சிறியவுமான நாடுகட்குச் சுவாதீனத் தலைவர்களாயினர். அக்காலத்தே வடக்கிலிருந்து வேகமாகப் படையெடுத்துவந்த துருக்கவரசர் ஆந்திரநாட்டிலும் தென்னாட்டிலும் புகுந்து சூறையாடினர். அப்போது, தென்னாட்டின் சநாதனதர்மங்களைக் காப்பதற்கென்றே விஜயநகர ராஜ்யம் உதயமாயிற்று. 14-ம் நூற்றாண்டில் ஆரம்பமான அம்மஹாராஜ்யத்தின் பலபராக்கிரமங்களால் தென்னாடுமுழுமையும் பாதுகாக்கப்பட்ட வரலாறு, சரித்திரவறிஞரெல்லாம் நன்கறிந்ததே. அவ்விஜயநகர—

ஏகாதிபத்தியத்தை அம்பி (Hampi) மாநகரிலிருந்து ஆண்டுவந்த அரசர்களும் அவர்பிரதிநிதிகளும், தமிழ்நாட்டவரிடத்தும் அந்நாட்டுத் தேவாலயங்களிடத்தும் அபிமானமும் ஆதரவும் மிகுந்துள்ளவராயிருந்தனர் என்பதற்கு வேண்டிய ஆதாரங்கள் உள்ளன. அவ்வரசர் பெருமக்களிலே, மல்லிகார்ச்சுனராயர் (1449—1465, விருபாக்ஷராயர் (1466—1485) காலங்களில், தமிழ்நாட்டின் இராசப்பிரதிநிதியாய் அனுப்பப்பட்டு ஆட்சிபுரிந்துவந்தவர், சாளுவத்திருமலைராயர் என்பவர். தென்னாட்டிற் பலவருஷம் அப்பதவியை நிர்வகித்துவந்த இவர், தமிழில் அறிவுடையாராயிருந்ததோடு, தமிழ்ப்புலவர்களிற் சிறந்தவர்களைப் பெரிதும் ஆதரித்தும்வந்தனர். இவர்காலத்திற்றான் காளமேகப் புலவர் என்ற ஆசுகவிச்சிங்கம் விளங்கியது. திருமலைராயர்சபைக்குக் காளமேகம் முதலில் எழுதிவிடுத்ததாகத் தமிழ்நாவலர்சரிதையிற் கண்ட பாடல் அடியில்வருமாறு:—

"தூதைந்து நாழிகையி லாறுநா ழிகையினிற்
பலசந்த மாலை சொலவும்
சூழுலா வந்தாதி யேழுநா ழிகையினிற்
றொகைபெற வகுத் தோதவும்
பாதஞ்செய் மடல் கோவை பத்துநா ழிகையினிற்
பரணியொரு நாண்முழுதுநீள்
பாரகா வியமெலா மீரிரு தினத்தினிற்
பகரக் கொடிக்கட்டினேன்
சீதஞ் செயுந்தொங்கன் மார்பினு னியலிசை
தெரிந்த திருமலைராயன்முன்
சீறியே வாதுகவி பாடுதற் கெதிர்வரு
திருட்டுக் கவிப்புலவரைக்
காதும் பிடித்துக் கவித்துக் கதுப்பிற்
காத்திட் டிடித்துமுதுகிற்
கலனைவைத் தேமுகக் கடிவாள மிட்டேறு
கவிகாள மேகநானே."

தம் ஆசுகவித்திறமையை இங்ஙனம் புகழ்ந்துகூறிய காளமேகத்தின் தற்புகழ்ச்சியில் நம்பிக்கைகொள்ளாது அவ்வுண்மையையறியத் திருமலைராயர் பல வருத்தும்வழிகளாலுஞ் சோதிக்கலாயினர். அங்ஙனம் சோதித்தறிந்ததைக் குறிக்கும் செய்யுட்கள் தனிப்பாக்களாக

வழங்குதலைப் பலரும் அறிவர். இச்சோதனைக்கெல்லாம் அப்புலவர் அஞ்சாதுநின்று தம் பெருங்கவித்திறமையைக் காட்டவே, அரசன் வியப்பும் உவப்பும் அடைந்து அவர்க்கு வேண்டிய வரிசைகளையும் கௌரவங்களையும் அளித்துச் சிறப்பித்தனன். இங்ஙனம் திருமலைராசரால் வறுமைநீங்கித் தாம் பெருமைபெற்றதை அடியில்வருமாறு அப்புலவர் அழகுபடப் பாடுகின்றார்—

"இந்திரன் கலையா யென்மருங் கிருந்தான்
அக்கினி யுதரம்விட் டகலான்
எமனெனைக் கருதா னரனெனக் கருதி
நிருதிவந் தென்னையென் செய்வாள்
அந்தமாம் வருண னிருகண்விட் டகலான்
அகத்துறு மக்களும் யானும்
அனிலமே யாகு மமுதினைக் கொள்வோம்
ஆரெனை யுலகினி லொப்பார்
சந்தத மிந்த வரிசையே பெற்றுத்
தரித்திர ராசனை வணங்கித்
தலைசெயு மென்னை நிலைசெய்கல் யாணிச்
சாளுவத் திருமலை ராயன்
மந்தர புயனுங் கோப்பய னுதவு
மகிபதி விதரண ராமன்
வாக்கினாற் குபேர னாக்கின னவனே
மாசிலீ சானனு மவனே"

உடுத்த ஆடை பல துளைக்கண்கள் உடையதென்பார் 'இந்திரன் கலையாயிருந்தான்' என்றும், பசி வயிற்றைவிட்டு நீங்கிற்றில்லை என்பார் 'அக்கினி உதரம் விட்டகலான்' என்றும், சிவனதுபிக்ஷாடனரூபத்தைக் கொண்டு திரியும் என்பால்வர யமன் அஞ்சினன் என்பார் 'எமனெனைக் கருதான் அரனெனக்கருதி' என்றும், இவர்களே இங்நிலையானபோது, ஒரு பெண்பாலாள் செய்யக்கூடியது ஒன்றுமில்லை என்பார், 'நிருதிவந் தென்னை யென்செய்வாள்' என்றும், வறுமைத்துயரால்வரும் நீர் கண்களைவிட்டொழியவில்லை என்பார் 'வருண னிருகண்விட் டகலான்' என்றும், வாயுவே தன்குடும்பத்திற்கு ஆகாரமாயுள்ளது என்பார் 'அநிலமதாகுமமுதினைக்கொள்வோம்' என்றும், இங்ஙனம் திக்குப்பாலக

ரில் அறுவர் தம்வசமாயிருத்தலால், 'ஆரெனையுலகினிலொப்பார்' என்றும், முடிவில் இவ்வருத்தங்கள் நீங்கத் தம்மைக் குபேரசம்பத்தில் வைத்தவன் திருமலைராயனுனதால் அவனை ஈசானனுகிய சிவபிரானென் றும் கூறினர்.

"இய லிசை தெரிந்த திருமலைராயன்' என்று புலவர்பாடுதலால், அத்தலைவர் தமிழறிவிற் சிறந்தவராயிருந்தமை பெறப்படும். மேற் குறித்த பாடலினின்று, சாளுவவமிசத்துக் கோப்பயன் என்பவாது புத்திரர் திருமலைராசர் என்பது தெரியலாம். திருவானைக்காக் கோயி லின் தெற்குத்திருமதிலில் உள்ள சாஸனமொன்று* கோபராஜன் குமாரரான சாளுவத்திருமலைராசர் சகாப்தம் 137...-ல். ஸ்ரீமுகவரு ஜம்புகேசுவரர்க்குத் திருவாபரணமொன்று அளித்ததாகக் கூறுகின்றது. அக்காலத்துக்குச் சரியான கிறிஸ்தவாப்தம் 1453-ஆகும். இதனுல், காளமேகப்புலவரை ஆதரித்த திருமலைராசரைப்பற்றியதே அச்சாஸனம் என்பதும், அவ்விருவரும் 15-ம் நூற்றுண்டின்மத்தியில் வாழ்ந்தவ ரென்பதும் தெளிவாதல் காண்க. கல்யாணி என்பது சாளுவவரசாது பூர்வகுடிப்பெயரும் விதரணாராமன் என்பது அவாது பட்டப்பெயரு மாகச் சாஸனங்களிற் காணப்படுகின்றன என்பர். இங்ஙனம் தம்மைப் பெரிதும் ஆதரித்த அரசனுடைய ஊரை மண்மாரியால் அழியும்படி புலவர் பாடினரென்று பிற்காலத்தார் எழுதிப்போந்தகதை உண்மை யுடையதாகாதென்றே கொள்க.

இனி, இக்காலத்துக்குப்பின்பு ஆந்திரவரசர்களும் தமிழ்ப்புலவர் களை நேரே அபிமானித்த செய்தி தெரியவருகின்றது. விஜயநகரவேந்தர் களிலே கிருஷ்ணதேவராயர் என்பவரே (1509—1529) மிகப் பிரபல ராக விளங்கியவர். இவர்காலத்தில் விஜயநகர ஏகாதிபத்தியம், ஆந்திர கன்னட தேசங்களையும் தமிழகத்தையுந் தன்னுட்கொண்டதா யிருந்தது. இவ்வரசர் அறிவு திரு ஆற்றல் என்ற மூவகைச் சம்பத் தும் நிரம்பினவர். தாமும் பெரியகவியாய்ப் பல கவிசிரேஷ்டர்களையும் ஆதரித்தவர். கோயில்களும் குளங்களும் இவர்காலத்துப் பேணப்பட் டும் பெருகியும் வந்ததுபோல வேறெக்காலத்தும் நிகழவில்லை. மற்றும்

---

* Ep. Rep. 67 of 1903 (Inscriptions of Madras Presidency. pp. 1560.

இவரது அருமைபெருமைகளையெல்லாம் இங்கெடுத்துக்கூறின் மிக விரியும். ஆயினும், சந்தர்ப்பத்துக்குப்பொருந்த ஒன்றை இவ்விடத்துக் கூறல் தகும். அஃதாவது இவர் தமிழ்ப்புலவர்களையும் பெரியோர்களையும் அபிமானித்து ஆதரித்துவந்தமையேயாம். இதற்குச் சில சான்றுகள் கூறுவோம்.

ஒட்டாரதேசத்தைக் கடகநகரில் (Cuttack) இருந்தாண்ட கஜபதி யரசனாகிய பிரதாபருத்திரன் (1497–1540) என்பவன், தமக்கு அடங்காதிருந்ததனால், கிருஷ்ணதேவராயர் உத்தேசம் 1515-ல், அவனாட்டின்மேற் படையெடுத்துச் சென்று அவனை வென்றதோடு, அவ்வரசன் மகளாகிய துக்கா என்ற மாதை மணம்புரிந்துகொண்டனர் என்பது அவ்விராயரது பிரசித்தசரித்திரங்களுள் ஒன்று. இது நிகழ்ந்த காலத்தே அவ்வரசர்பிரானுடனிருந்த குமாரசரசுவதி என்ற தமிழ்ப் புலவர் அத்திருமணத்தைச் சிறப்பித்துப்பாடியிருத்தல் அறியத்தக்கது. அவர் பாடலாவது—

"கலிங்க மிழந்துநுதிக் கைச்சங்கந் தோற்று
மெலிந்துகட கந்நழுவ விட்டாள்—மலிந்தமலர்ப்
பொன்னிட்ட மான கிருஷ்ண பூபாலா வுன்றனக்குப்
பின்னிட்ட வொட்டியன்போற் பெண்."

எனக் காண்க. இப்பாட்டில், உனக்குத் தோல்வியுற்ற ஒட்டாரதேசத் தரசனைப்போலவே, அவன் பெண்ணும், கலிங்கம் நுதிக்கைச்சங்கம் கடகமென்னும் இவற்றை உன்முன் நெகிழவிட்டாள் என்று சிலேடை நயம் பெறப் பாடப்பட்டுளது. 'ஒட்டியன் கலிங்கதேசத்தையும், துதிக்கையுடைய யானைக்கூட்டத்தையும்* கடகம் என்ற தலைநகரையும் போரில் இழந்தோடினன்; அங்ஙனம் இழக்கும்படி செய்த உன்பிரதாபத்தை அறிந்த அவன் மகளும் வீரனான உன்னையடைய விரும்பியதனால் உண்டான தன் தேகமெலிவால் தானும் கலிங்கத்தையும் (=வஸ்திரத்தையும்), நுதிக்கைச்சங்கத்தையும் (=முன்கையிலணிந்த வளைகளையும்), கடகத்தையும் (=தோள்வளையையும்) நழுவ விடலானாள்' என்று கவி சமற்காரமாகக் கூறும் அழகு அறிந்து மகிழத்தக்கதாம். இதனால், அவ்வரசரது ஆஸ்தானத்தில் பெருந்தமிழ்ப்புலவர்களும் எப்போதும்

* கஜபதியாதலின், யானைக்கூட்டங்களை யிழாந்தானென்க.

இருந்துவந்தனர் என்பது விளங்குகின்றது. இக்குமார்சாசுவதி போலவே, கிருஷ்ணதேவராயரால் அபிமானித்துக் கௌரவிக்கப்பட்ட தமிழ்ப்புலவர்கள் பலர். தமிழிற் பிரபலமாக வழங்கும் சூடாமணி நிகண்டின் ஆசிரியராகிய மண்டலபுருஷர் என்ற சமண் புலவர் இவ்வரசர்பெருமானால் ஆதரிக்கப்பெற்றவருள் ஒருவர். இவர் தம் நூற்கண்ணே 'கொடைமடம்' என்ற சொற்குப் பொருள்கூறும்போது,

"படைமயக் குற்றபோதும் படைமட மொன்றி லாதான்
மடைசெறி கடகத் தோளான் மதிக்குடை மன்னர் மன்னன்
கெடிமன்னர் வணங்குந் தாளான் கிருட்டிண ராயன் கைபோற்
கொடைமட மென்ப தம்ம வரையாது கொடுத்த லாமே".

என்று, வரையாது யாவர்க்கும் கிருஷ்ணராயர் வழங்குவதுபோலக் கொடுப்பதே, அத்தொடர்மொழியின்பொருள் என்கின்றார். இவ்வாறு பாடுதல், அவ்வேந்தரது கொடைப்பெருமையைத் தாமும் நேரிலறிந்தனுப வித்தவர் என்பதற்குத் தக்க சான்றுமன்றோ? மண்டலவர் புகழ்ந்த இக்கிருஷ்ணராயரை, இரட்டவரசனான கிருஷ்ணன் என்று சிலர் கருதி வருவது தவறும் என்பது, பங்களூரிற்பிரசுரமாகும் 'மிதிக்-ஸொஸைடி' பத்திரிகையில் யான் ஆங்கிலத்தில் எழுதுவித்த வியாசத்தால் நன்கு விளங்கக்கூடியது.* இனி, இவ்வரசர்பெருந்தகைமேல் வேளாண்மர பினராகவும் துறவியாகவும் விளங்கிய ஞானப்பிரகாசர் என்ற பெரியவ ரொருவர்,† 'மஞ்சரிப்பா' என்றபிரபந்தம் பாடியிருந்தார் என்றசெய்தி—

---

* ஷை பத்திரிகையிலே, ஸ்ரீ கே.ஜி. சங்கர ஐயரவர்கள் என் கொள்கை களை மறுத்தெழுதிய விஷயத்தைப் பார்வையிடலானேன். தக்க காரணங்க ளுடனும், தமிழ்ச்சரித்திரவழக்கு சொற்பொருள்வழக்குக்களில் ஆராய்ச்சி காட்டியும், அம்மறுப்புரை எழுதப்பட்டதாகத் தெரியவில்லை. அவற்றை விரித் தெழுதுவதற்கு இது சந்தர்ப்பமன்று. மண்டலவர், இரட்டவரசனான கிருஷ் ணன் காலத்தவரென்பது முன்னரே தீர்க்தவிஷயமென்று அவர்களெழுதியதன் கருத்து விளங்கவில்லை. என் கொள்கைக்குக் கூறப்பட்ட காரணங்களைத் தக்க வாறு பரிசீலனைசெய்யும் தமிழறிஞரெவரும் அவ்வபிப்பிராயங்கொள்ளாரென் பது திண்ணம்.

† கிருஷ்ணதேவராயர் மந்திரிகளுள் ஒருவரான அம்பி—அறம்வளர்த்த முதலியாரால், வேளாளர்க்குக் குருவாக நியமிக்கப்பட்டவர் இவரென்பர். (அபி தானசிந்தாமணி).

"வானப்ர காசப் புகழ்க்கிருட்ண ராயர்க்கு மஞ்சரிப்பா
கானப்ர காசப் புகழாய்ந்து கச்சிக் கலம்பகஞ்செய்
ஞானப்ர காச குருராயன் வாழ்ந்து நலஞ்சிறந்த
மானப்ர காச முடையோர் வளர்தொண்டை மண்டலமே."

என்னுந் தொண்டைமண்டலசதகச் செய்யுளால் வெளியாகின்றது. இப்பிரபந்தம் இப்போது கிடைத்திலது. இதுவன்றித் தேவாலயங்கள்போலும் தர்மஸ்தாபனங்களில் அதிக்கிரமங்கள் நடந்தால், அவற்றைத் தமிழ்ப்பெரியோர்களும் புலவர்களும் தம்மரசராகிய கிருஷ்ண தேவர்க்குச் செய்யுள்மூலமாக அறிவித்து வந்திருக்கின்றனர். திருவாரூர்க் கோயிலில், திருவிழாவை ஒழுங்காகநடத்தாமலே, பட்டர்கள் கொடியிறக்கப்புக, அதனைக்கண்டு மனஞ்சகியாமல் சைவத்துறவியும் புலவருமாகிய தத்துவப்பிரகாசர் என்பவர்—

"மருவுபுகழ்க் கிருட்ண மகராச ராணை
அரிய [1]வடமலையா ராணை—திருவாரூர்ப்
[2]பாகற் கொடியறுப்பார் பாதந் திருவாணை
த்யாகக் கொடியிறக்கா தே."

என்று கொடியிறக்கவொட்டாமல் அரசாணைகூறித் தகைந்துவிட்டு, அப்பட்டர்களுடைய அதிக்கிரமச்செய்கையை,

[3] 'ஊழித் துலுக்கல்ல வொட்டியான் றானுமல்ல
வீழித் [4]துலுக்குவந்து மேலிட்டே—யாழி[5]
சிறந்ததிரு வாரூர்த் தியாகருடைப் பூசை
இறந்ததே கிட்டினரா யா."

---

[1]வடமலையார் - கிருஷ்ணதேவராயருடைய தலைமையமைச்சராய்க் கீர்த்தி பெற்ற சாளுவ-திம்மவரசு (திருமலைராசர்) என்று தோற்றுகிறது. [2]தியாகராசருடைய உற்சவங்களிலே 'பாகற்கொடியறுத்தல்' அல்லது 'பாகல்வேட்டை' என்ற திருவிழாவைப்பற்றித் திருவாரூருலா 421-ம்கண்ணி, அரும்பதவுரையுள் மகாமகோபாத்தியாய-ஐயரவர்கள் எழுதிய குறிப்பு அறியத்தக்கது. [3]கிருஷ்ண தேவர் பட்டமடைவதற்குமுன், ஒட்டியரும் துருக்கரும் சேர்ந்துபிரவேசித்துத் தென்னாட்டையலைத்துவந்தமையால், 'ஊழித்துலுக்கல்ல ஒட்டியான்றானுமல்ல' எனப்பட்டதென்க. [4]திருவீழிமிழலையிலிருந்து ஸ்வாமிபூசனைபுரிந்துவந்த பட்டரது தீச்செயல்நோக்கி, அவரை 'வீழித்துலுக்கர்' என்றாரென்க. [5]திருவாரூர்த் தேர்க்கு 'ஆழித்தேர்' என்ற பெயர்வழக்குண்டென்பர்.

என்று கிருஷ்ணதேவராயர்க்கு எழுதிவிடுத்தனர் என்றும், உடனே இராயர் அக்கோயிற்பட்டர்களை மாற்றிவிடக் கட்டளையிட்டனரென்றும், அப்போது அவர்களை நோக்கித் தத்துவப்பிரகாசர்—

"உண்ட வயிற்றி லுமிக்காந்த விட்டதே
தொண்டரே வீழித் துலுக்கரே—பண்டெல்லாம்
அப்ப மவலென் றதிரசமுந் தோசைகளுங்
கப்புவது போச்சே கவிழ்ந்து"

என்று இகழ்ந்து கூறினரென்றும் அறியப்படுகின்றன (தமிழ் நா.). இவ்வாறே மற்றொருகாலத்தில், அக்கோயிலிலிருந்த அறுபத்துமூவர்விக்கிரகங்களில் இரண்டை, அருச்சகரோ அதிகாரியோ ஆகிய நாகரசநம்பி என்பவர் வெட்டியுருக்கிவிட்டதை அறிந்த அத்தலத்தார், அச்செய்தியைக் கிளிக்குப் பாடப் பழக்கி, அதனைக் கிருஷ்ணதேவராயர் திருமுன்பு சொல்லும்படி செய்தனர் என்று தெரியவருகிறது. அப் பாடலாவது:—

"முன்னு ளறுபத்து மூவரிருந் தாரவரில்
இன்னா ளிரண்டுபே ரேகினர்—கன்னன்
நருக்குகின்றான் விற்றுவிட்ட நாகரச நம்பி
இருக்கின்றான் கிட்டிணரா யா" என்பது.

இனி, சைவ வைணவ வாதங்களைப்பற்றிப் பாடப்பட்ட இருசமய விளக்கம் என்றநூலியற்றிய அரிதாசர் என்ற புலவர் இக்கிருஷ்ணதேவர் காலத்தவரென்பதும், அவரால் அபிமானிக்கப்பட்டவரென்பதும் அறியப்படுகின்றன. ஷை நூலின் பாயிரத்துள்,

"கிரிபோல் விளங்கிக் கிளரும்புயக் கிட்ணராயர்
தரைமீது சிங்காத் திரியிற்சயத் தம்பநாட்ட
வரமா தரவா லளித்தேவட கூவமேவும்
கருமா மணிவண் ணனைநீடு கருத்துள்வைப்பாம்"

என்றுள்ள பாடலினின்று மேற்கூறிய செய்திகளை அறியலாம். கிருஷ்ணதேவராயர் *சிம்மாசலமென்ற திருமால் திருப்பதியில் ஜயஸ்தம்பமொன்று நாட்டினர் என்ற விஷயம் இப்பாட்டிற்கூறப்படுகின்றது. அவ்வரசர் நாட்டிய இத்தம்பம், நாம் மேலேகூறிய கலிங்கவாச

*விசாகபட்டணத்துக்கு வடமேற்கே 4 மைலில் உள்ளது.

னை பிரதாபருத்திரனுடன் உத்தேசம் 1515-ல் அவர்நடத்தியபோரின் வெற்றிக்குறியேயாகும். அவ்வரசரே பாடிய ஆமுக்தமால்யதா (காண். 4, பத். 290) விலும், அவரது ஆஸ்தானகவியாகிய அல்லசானி பெத்தன்னர்பாடிய மனுசரிதத்திலும் (காண். 1, பத். 36, 38) சாஸனத்திலும் (Ep. Rep. No. 74 of 1903) ஷ ஜயஸ்தம்பத்தைப்பற்றிப் பேசப்பட்டுள்ளன என்பர்.* சிம்மாத்திரியில் அத்தம்பம் நாட்டப்பட்டதாக இருசமயவிளக்கமுடையார் கூறினும், பொட்டுநூர் என்றவூரில் அஃது அமைந்ததாகத் தெரிகின்றது. இதனால் அவ்வூரும் சிம்மாசலமும் மிகவும் அடுத்துள்ளனவாகவேண்டும் என்பதும், சிம்மாசலத்தின் அடிவாரத்தில் சிம்மாத்திரிப் பொட்டுநூர்† என்று இப்போதும் வழங்கும் ஊரே, அத்தம்பம் நாட்டப்பட்ட இடமாகவேண்டுமென்றும் கருதல் தகும். அல்லசானி-பெத்தன்னகவியும்—

"சிம்மாசலத்துத் திருமாலுடைய பிரமோற்சவத்தைச் சேவிக்கவருந்தேவர்கள், பொட்டுநூர் என்ற ஊரில் கிருஷ்ணதேவராயர்நாட்டிய ஸ்தம்பத்தின்மேல் வரைந்துள்ள சாஸனம் இன்னதென்பதைப் பார்க்கவந்து, அதனெழுத்துக்கள் தெளிவாயில்லாமையால், கலிங்க (ராசனுகிய பிரதாபருத்திர) னுடைய அபகீர்த்தியாகிய மையைத் தடவி வாசிப்பாராயினர்." (மனுசரிதம்).

என்று அழகாகப்பாடுதல், அவ்விரண்டூர்களும் நெருங்கியுள்ளனவே என்பதற்குச் சிறந்த சான்றன்றோ? சிம்மாத்திரித் திருமாலிடம் கிருஷ்ணதேவர் பெரும் பக்திகொண்டிருந்தவர் என்பது, சகவருஷம் 1438 1441-ல் அவ்வரசர் அநேகவூர்களும் திருவாபரணங்களும் அத் திருமாலுக் களித்தனரென்று சாஸனங்கள் சிம்மாசலக்கோயிலிற் காணப்படுவதால் விளங்கக்கூடியது.

இவற்றால், கோயில்முதலிய தர்மங்களின் குறைபாடுகளை அவ்வப்போது கேட்டுத் தீர்த்து மன்னுயிரைத் தன்னுயிர்போற் பாதுகாத்து வந்ததோடு, தமிழபிமானமும் உடையராயிருந்தனர் அவ் வரசர்பெருமான் என்பது பெறப்படும். பெருங் கல்விமானாகவும், சிறந்தகவியாக

*Gazatteer of Vizagapatam District, pp. 28-29, 230.

†சிம்மாசலத்துக்கு உத்தேசம் 30 மைலில் பொட்டுநூர்என்ற ஊரொன்றுமுள்ளது. அதனையே, ஷ ஜயஸ்தம்பம் நாட்டிய இடமாகச சரித்திரவுரிஞர் எழுதியிருப்பது பொருத்தமாகத் தோற்றவில்லை.

வும் விளங்கித் தமிழ்நாட்டின் பெரும்பாகத்தை ஆட்சிபுரிந்துவந்த பேரரசராகிய அவர்க்குத் தமிழ்ப்பாஷையில் அறிவும் ஆதரவும் இருந் தன என்பது ஓர் ஆச்சரியமன்று. அவ்வரசர் இயற்றிய கிரந்தமாய்ப் பலரும் அருமைபாராட்டிவருவது ஆமுக்தமால்யதா என்ற ஆந்திர நூலாம். சூடிக்கொடுத்தாள் என்பதே 'ஆமுக்தமால்யதா' என்பதன் பொருள். ஸ்ரீ ஆண்டாள் வைபவத்தைப்பற்றி அவர் பாடியுள்ள சொற் செறிவு பொருளமைதிகளைப்பற்றி, ஆந்திரவறிஞர் புகழ்ந்து பாராட்டுவதைப் பலமுறை நான் கேட்டிருக்கிறேன். இவ்வரசர் அரசியன் முறையாற் பொதுநோக்கமுடையராயினும், சமயக்கொள்கையில் தென்னாட்டு ஸ்ரீவைஷ்ணவ ஸம்பிரதாயத்தைத் தழுவியவர். இவர்க்கு ஆசாரியர் இன்னாரென்பதற்குத் தெளிவான ஆதாரமில்லையென்றும், ஆனால், இவர் பின்னோர் காஞ்சீபுரம் ஸ்ரீ தாததேசிகன் திருவடிஸம்பந்திகளென்பதற் குப் பிரமாணங்களுண்டென்றுங் கூறுவர். இவருடைய கிரந்தத்தில் ஸ்ரீ ஆண்டாள்பாசுரங்களின் அருமைபெருமைகளும், தமிழ்நாட்டின் சிறப்புக்களும், நம்மாழ்வார், ஆளவந்தார், உடையவர், வேதாந்ததேசிகர், மணவாளமாமுனிகள், அஹோபிலம் ஜீயர் என்ற ஸ்ரீவைஷ்ணவ பரமாசார்யர்களின் அவதாரமகிமைகளும் அழகாகக்கூறப்பட்டுள்ளன என்பது தெரிகின்றது. இதனால், மதரீதியாலும் திராவிடபாஷையை இவ்வரசர் கௌரவித்தவர் என்பது விசதமாகும். அன்றியும், தென்னாட்டரசியன்முறைக்கென்று, தமிழமைச்சரையும் இவ்வரசர் உடையராயிருந் தனர். அவ்வமைச்சருள் அம்பி-அறம்வளர்த்தமுதலியார் என்பவரொருவர். இம்முதலியார் அபிமானத்தைத் தமிழரசர்களும் அக்காலத்து எதிர்பார்த்தவராயிருந்தனர். பாண்டியனொருவன், இவர்மேற் கலம்பகமொன்றுபாடினனாக, 'அவ்வாறுபாடியது தகுமா?' என்பதுபற்றி உசாவிய புலவர்க்கு விடையாக, அவ்வரசன்பாடிய செய்யுளொன்று, அடியில் வருமாறு தமிழ்நாவலர்சரிதையிற் காணப்படுகின்றது.

'அறம்வளர்த்தமுதலியாரைப் பாண்டியன் கலம்பகம்பாடலாமோ'

என்ற புலவர்க்குக் கூறியது.

"உங்கண் மன்றெரி யும்புல வீரொரு சேரசோச
திங்கண் மாயினந் திங்களின் கூடச்செம் பூரமா
துங்கன் மாபினிற் கங்கையுஞ் சூடினன் சோதியன்றோ
எங்கண் மாபுண் டெனக்கவி பாடினம் யாமவர்க்கே"

"சிவபிரான், திங்களுடன் கங்கையையுஞ் சடையிற் றரித்துள்ளமையால், திங்கள்மரபினராகிய எமக்கும் கங்கைமரபினராகிய முதலியார்க்கும் உறவுண்மைபற்றி, யாம் அவரைப் பாடலாயினேம்" என்பது இப்பாடற் கருத்தாதல் காண்க. [செம்பூர் அறமா தூங்கன் - செம்பூர் - அறம் வளர்த்தமுதலியார்; செம்பூர் அவரதுரிமையூரும், அம்பி(Hampi) அவர் உத்யோகம்வகித்த ஊருமாகக் கொள்ளத்தக்கன]. ஒருகால் கிருஷ்ண தேவராயர் திருமுன்பு வேளாளமகளிரைப்போல வேஷம்பூண்டு ஆடிய கூத்தர் சிலரைக் கண்டு இம்முதலியார் பொறுமல் தங்குலத்துக்கு அவமானமாக நடித்த அவர்களை வாளால்வெட்டி மடிவித்தாரென்ற சரித்திரமும் வழங்குகின்றது. இது கி. பி. 1511-ல் நடந்ததென்று கூறுவர்*. இச்செய்தி அடியில்வரும் தொண்டைமண்டல சதகச்செய்யுளாலும் அறியத்தக்கதாம்.

"தாளாண்மை யுள்ள புகழ்க்கிருஷ்ண ராயன் சமுகத்திலே
வேளாண் மகளிரைப் போலே விநோதித்து வேடங்கொண்டு
கோளார் வயிரியர் கூத்தாடத் தங்கள் குடிமையெண்ணி
வாளா லவருயிர் மாய்த்ததன் றோதொண்டை மண்டலமே."

இனி, கிருஷ்ணதேவராயர்காலத்துக்குப் பின்பு, அச்சுதசதாசிவ தேவராயர்கள் நாளில் அவ்விராயவமிசத்துப் பிரதிநிதியாய்த் தென்னாட்டில் வெல்லப்படாத பகுதிகளையும் வென்று ஆட்சிபுரிந்துவந்தவர், விட்டலதேவராயர் என்பவர். இவருடைய சாஸனங்களில் 'வீரப்ரதாப மகாமண்டலேசுவர ராமராஜ திம்மராஜ விட்டலதேவ மகாராஜா' என்று சிறப்பிக்கப்படுவர் (Ep. Rep. 129 of 1905). இவர், இராயராட்சிக்கடங்காதிருந்த கேரளதேசத்தின் தலைநகராகிய அனந்தசயனத்தின் மேல் கி. பி. 1543-ல் படையெடுத்துச் சென்றனரென்றும், இவரது சேனைகள் தெற்கே கன்னியாகுமரிமுதல் வடக்கே நைஸாம் ராஜ்யத்து முதுகல்வரையுமுள்ள பிரதேசங்களை வென்றடிப்படுத்தின என்றும் சொல்லப்படுகின்றன. இவர் கன்னியாகுமரிக்குப் படையெடுத்துச் சென்று வென்றதற்கு அறிகுறியாக, அக்குமரிப்பக்கத்துச் சுசீந்திரம்—விஷ்ணுகோயிலிலுள்ள சாஸனமொன்று கொல்லமாண்டு 722—(கி.பி. 1546—47)ல் இவர் பிறந்தநாளன்று அர்ச்சனை நடத்திவருதற்கென்று, அந்நாட்டரசனாகிய பூதல வீரராமவர்மாவால் சிலபொருள்கள் வைக்கப்

*தொண்டைமண்டலசதகவுரை.

பட்டதைக் கூறுகின்றது.* இங்ஙனம், விட்டலதேவராயர் கன்னியா குமரியைநோக்கிப் படையெடுத்துச் சென்றதையே, அப்போதிருந்த பாண்டியனொருவன்—

"தொட்டி விருக்கத் தொடங்கிய நாண்முதலா
அட்டதிக்கு நின்குடைக்கீ ழாயிற்றே—விட்டலையா
தன்குமரி யன்றித் தனிக்குமரி கொள்ளாநீ
தென்குமரிக் கேகுவதென் செப்பு."

என்று பாடியிருக்குஞ்செய்தி, தமிழ்நாவலர்சரிதையாற் றெரியலாம். இதனால் இவ்விட்டலதேவரும் தமிழறிவும் அபிமானமும் உடையரா யிருந்தவர் என்பது பெறப்படும்.

இங்ஙனம் தென்னாட்டின் சநாதனதர்மங்களையும் தர்மஸ்தாபனங் களையும் பாதுகாத்துவந்து அதன் வாழ்த்துக்கு உரியதாய் விளங்கிய மகாராஜ்யமானது, 1565-ல் நடந்த தலைக்கோட்டைப் பெரும்போரிலே, நிலைகுலைந்துவீழ்ந்தது. இது தக்ஷிணதேசத்தின் பெருந்துரதிர்ஷ்டமே யாம். அவ்வேகரீதிபத்தியம் நிலைகுலையவே அதன் பிரதிநிதிகளாய்த் தென்னாடாண்ட தலைவர்களும் வலியவர்களும் சிறியவும் பெரியவுமான இராஜ்யங்களை ஆங்காங்குத் தாபித்துக்கொண்டனர். அப்படித் தாபிக்கப்பெற்ற அரசுகளிலே மதுரை நாயகராஜ்யத்தை ஈண்டுக்குறிப் பிடல் தகும். பாண்டியர்கட்குப் பின்பு இம்மதுரையம்பதியைத் தலை நகராகக்கொண்டு, பல தலைமுறைகளாக விஜயநகரவேந்தரின் பிரதிநிதி களாய் ஆட்சிபுரிந்துவந்த இவ்வரசர்களுள்ளே திருமலைநாயகரே (1623–1659) சிறந்தவர். பெரும்புகழாளராகிய இவர்காலத்தே கோயில் களும் குளங்களும் செழிக்க மதுரையே புதுப்பிக்கப்பட்டசெய்தி பலரும் அறிந்தது. இவர்காலத்தில் தமிழ்ப்பெரும்புலவர்களும் சிறப்பிக்கப்பட் டனர். குமரகுருபரமுனிவர், தாம் ஸ்ரீமீனாட்சியம்மைபேரிற் பாடிய பிள்ளைத்தமிழை இவ்வரசர்திருமுன் அரங்கேற்றுவித்தனரென்பதும், அப்போது "தொடுக்குங்கடவுட்பழம்பாடல்" என்றசெய்யுள்வர, அதன் அருமைப்பாட்டுக்கு வசப்பட்டு ஸ்ரீமீனாட்சியே ஒரு பெண்குழந்தை வடிவாக ஸபையில் எழுந்தருளியிருந்து கேட்டுவந்து மறைந்தனளென் பதும் பிரசித்தமானசரித்திரம். அம்முனிவர் இயற்றிய மீனாட்சியம்மை குறம் என்ற மற்றொரு பிரபந்தமிறுதியில்—

*Tinnevelly Gazetteer. pp. 59.

"சீர்வாழி தென்மதுரை நின்மலனு ரருள்வாழி
கார்வாழி யங்கயற்கட் கன்னிதிரு வருள்வாழி
சீர்வாழி கச்சிநகர்த் திருமலைபூ பதிவாழி
பேர்வாழி யவன்செல்வம் பெரிதூழி வாழியவே"

என்று அம்முனிவர் திருமலைநாயகரை மனமாரவாழ்த்துதலும் அறியத் தக்கது. நாயகவரசர் பூர்வத்திற் காஞ்சிபுரத்தில் வாழ்ந்தவர்என்று சொல்லப்படுதலால், 'கச்சிநகர்த்திருமலைபூபதி' எனக் கூறப்பட்டனர் என்க. இவர் முன்னோருள் ஒருவராகிய கிருஷ்ணவீரப்பர் (கி. பி. 1572) என்பவரும் இவ்வாறே கூறப்படுதலை, "அன்னவ னரசர்சூழுங் கச்சிவீ ரப்பனென னும்—மன்னவன்" என்னும் சுந்தரபாண்டியப்பாயிரத் தொடராலும், 'கதிக்கும் பரமன்னர் பொன்னூர் முடிகளைக் காவி லெற்றி—மிதிக்குங் கடாசலத் தான்கச்சி வாழ்கிட்ண வீரப்பனே"என்ற மதுரைத் திருப்பணிமாலைத் தொடராலும் அறியலாம். நிற்க, நாயக வரசர்கட்கு உள்ளடங்கிய தென்னாட்டுப் பாளையப்பட்டுக்கள் 74-ல் பாதிக்குமேல் தெலுங்கத்தலைவர்கள் ஆட்சியைச் சேர்ந்தவை. இத்தலை வர்களிற் பலர் தமிழறிவுடையராய்த் தமிழ்ப்புலவர்களை ஆதரித்தவர்களே. கூளப்பநாயகன்காதல், விறலிவிடுதூது போன்ற சில்லறைப்பிரபந்தங்கள் பல இன்னோர்காலங்களில் எழுந்தவைகளாம். இத்தலைவர்களிலே எட் டயபுரத்தரசர்கள், தமிழறிவும் ஆதரவும் மிக்குடையவர்களாயிருந்தன ரென்பது, அவர்களைப்பற்றிப் புலவர்கள் பாடிப்போந்த தனிப்பாடல்களி னின்று நாம் தெரிந்துகொள்ளலாம்.

இவ்வாந்திரவரசர்களும் வலிமைகுன்றிய சிலகாலத்திற்கெல்லாம், இவர்களையெல்லாம் வென்று கீழ்ப்படுத்தி மகமதியராஜாங்கம் மேலோங் கியது. அமைதிக்கே இடமின்றியொழிந்த இக்காலங்களில், தமிழ் வளர்ச்சிக்கு இடமில்லையென்று நாம் துக்கப்படவேண்டியதுமேயில்லை. பிறகு, ஆங்கில ஸாம்ராஜ்யம், நம் சென்னையிலிருந்து தொடங்கிப் பரதகண்ட முழுதும் வியாபிக்கவே, எங்கும்போல நம்நாட்டிலும் அமைதியும் நல்வாழ்வும் ஏற்பட்டுள்ள விஷயம் நாம் நன்கறிந்தது.

தமிழ்மக்கள் ஆந்திரதேசத்தை ஆண்ட காலங்களிலும் ஆந்திர மக்கள் தமிழகத்தை ஆண்ட காலங்களிலும் பாஷை நடையுடைகளாலும் மனோபாவங்களாலும் அவ்விருவரும் பெரிதும் கலப்புற்றிருக்கவேண்டு மென்பது, சொல்லாமலே அமையும். ஆந்திரகவிகளில் நூற்றுக்கணக்

கானவர், தமிழகத்தினின்று ஆந்திரதேசத்துக் குடியேறியவராகவும் திராவிடதேசத்தவராகவும் உள்ளனர் என்று, சிலஆண்டுகட்குமுன் இம் மதுரைமாநகரிற் கூடிய "ஆந்திரஸாஹித்திய பரிஷத்" என்ற மகாசபையில் அதன் அக்கிராசனுதிபதி வெளியிட்டனராம். இச்செய்தி, அவ்விரு நாட்டார்க்கும் இருந்த சம்பந்தத்தை நன்குவிளக்குவதன்றே? சில நூற்றுண்டுகளாகத் தமிழ்நாட்டின் பலபாகங்களிலுங் குடியேறிவந்த ஆந்திரமக்களுள்ளே, பெரியோர்களும் வித்வான்களும் பலர் விளங்கியிருந்தனர். இவர்களால் தென்னுடு அடைந்த பயன்களிலே, ஸ்ரீதியாகையர் என்ற மகானுல் கர்நாடகசங்கீதத்துக்கே ஒருபுதுத்தோற்றமுங் கிளர்ச்சியும் உண்டானசெய்தியை இங்கே குறிப்பிடல் தகும்.

ஆங்கில ஸாம்ராஜ்யத்தின் மாகாணப்பிரிவுகளிலே திராவிடபாஷைகள் என்று கூறப்படும் தமிழ் தெலுங்கு மலையாளங் கன்னடம் என்ற பெரும் பாஷைகள் வழங்குந் தேசங்கள் ஒருதொகுதியாக அமைக்கப்பட்டுள்ளன. இத்தேசப்பிரிவைச் சென்னைமாகாணம் என்று, இடவமைதிபற்றிப் பெயர்கூறுவதினும், 'திராவிடமாகாணம்' என்று பாஷையமைதியைக்கொண்டு வழங்குவது மிகவும் பொருந்துவது எனலாம். பாஷைகள் வழங்கும் முறையாகவே தேசங்கள் பிரித்தாளப் படவேண்டும் என்ற கிளர்ச்சி சிலகாலமாக ஆந்திரமக்கட்குள் அதிகமாக உண்டாயினும், இப்போது அமைந்துள்ள மாகாணப்பிரிவு, பூர்வசரித்திரமுறைக்கு ஒத்ததாய் மேற்குறித்த நான்கு திராவிடமக்களை நெடுங் காலம் ஒருசேரவைத்து ஒற்றுமைப்படுத்தி வந்திருக்கிறதென்பது திண்ணம். இவ்வொற்றுமைக்கு, இன்று அக்கிராசனம் வகிக்கும் நம் வித்யாவிலாகா—மந்திரியாரும் ஒரு சாட்சியாவர். சென்னைமாகாணத்தின் வடகோடிநாட்டினராகிய இவர், செந்தமிழ்நாட்டின் தலைநகரில் அமைந்த தமிழ்ச்சங்கத்தை அபிமானித்து, இன்று அதன் வருஷக் கூட்டத்தின் தலைமைவகிப்பது, நான் மேலே கூறிப்போந்த ஆந்திரத் தலைவர்களுடைய சரித்திரத்தை ஞாபகப்படுத்துகின்றது. ஆந்திரத் தலைவர்கள் தமிழை அபிமானித்தாதரித்தது புதியதன்று என்பதும், இதுபோலும் சம்பந்தம் என்றுமிருந்து பரஸ்பரம் பாஷைமுதலியவற்றுக்குப் பேருதவி அமையவேண்டும் என்பதுமே இவ்வுபந்நியாசத்தை இம்மகாசபையில் யான் எழுதிப் படித்ததன் நோக்கம். இத்தகைய தொடர்பு நீடு வாழ்வதாக.

ஸ்ரீ:

மதுரைத் தமிழ்ச்சங்கத்தின்

22-23-ம் வருடக் கொண்டாட்ட நிகழ்ச்சிவிவரம்.

நிகழும் ரக்தாக்ஷி-ஞூ ஆனிமீ ௧௨, ௧௩-உகளில் நம் மதுரைத் தமிழ்ச்சங்கத்தின் இருபத்திரண்டு இருபத்துமூன்றும் வருடக்கொண்டாட்டம், இம்மதுரைமாநகரில் ஸேதுபதிஉயர்தரக்கலாசாலைக்கட்டடத்தில் மிகவும் சிறப்பாக நடைபெற்றது. முதல்நாளாகிய ௧௨-உ மாலை ஐந்துமணிக்கு ஸபைகூடியது. அதற்குச் சென்னை வித்தியா இலாகா மந்திரியும், சென்னைச் சருவகலாசங்கத்துப் புரோசான்சலருமான கனம் பொருந்திய ஸ்ரீமான் ஸர். பரசுராமதாஸ் பாத்ரோ அவர்கள், இச்சங்கத்தின் சாசுவத அக்கிராசனாதிபதியும் தமிழ்வள்ளலுமான மாட்சிமை தங்கிய ராஜராஜேசுவர முத்துராமலிங்கஸேதுபதிமன்னரவர்கள், ஸ்ரீமான்களான இடையகோட்டை ஜமீந்தாரவர்கள், கடவூர் ஸப் ஜமீந்தாரவர்கள், மாம்பாறை மைனர்ஜமீந்தாரவர்கள், தோட்டப்பநாயக்கனூர் ஜமீந்தாரவர்கள், மதுரை ஜில்லாநீதிபதி V. S. நாராயணையரவர்கள், ஸப்ஜட்ஜ் பாஷ்யமையங்காரவர்கள், ராமநாதபுரம்ஜில்லா நீதிபதி, கிருஷ்ணஸாமி ஐயரவர்கள், ஸப்ஜட்ஜ் சவுரிராஜுலுநாயுடு அவர்கள், மதுரைஜில்லா இன்கம்டாக்ஸ்ஆபீஸர், ராமநாதபுரம்ஜில்லா இன்கம்டாக்ஸ்ஆபீஸர், கள்ளர் ஸ்பெஷல் ஆபீஸர் ராஜாஐயரவர்கள், மதுரை ஜில்லா போலீஸ் டெப்டி ஸூபரிண்டெண்டெண்டு கற்பகவிநாயகம்பிள்ளையவர்கள், மதுரை நகர போலீஸ் இன்ஸ்பெக்டர் நஞ்சுண்டையரவர்கள், M. T. சுப்பிரமணியமுதலியாரவர்கள், P. T. ராஜன் அவர்கள், A. ரெங்கஸாமி ஐயரவர்கள், K. இராமையங்காரவர்கள், ஸோமசுந்தரபாரதியவர்கள். T. C. ஸ்ரீநிவாஸையங்காரவர்கள், M. மாணிக்கவாசகம்பிள்ளையவர்கள், V. S. ராமஸ்வாமிசாஸ்திரிகள், N. R. கிருஷ்ணஸாமி ஐயங்காரவர்கள், R. கணபதிஐயரவர்கள், மஹாமஹோபாத்யாய உ. வே. சாமிநாதையரவர்கள், விபுலாநந்தசுவாமிகள், ஸேதுஸமஸ்தானவித்வான் ரா. இராகவையங்காரவர்கள், சென்னை லெக்ஸிகன்கமிட்டி தமிழ்ப்பண்டி

தர், மு. இராகவையங்காரவர்கள், திருச்சி நேஷனல்காலேஜ் ஸ்தாபகரு ளொருவரான சுந்தரசாஸ்திரிகள், திருச்சிநேஷனல் காலேஜ் தமிழ்ப்பண்டிதர், ம. கோபாலகிருஷ்ணையரவர்கள், மதுரைத்தமிழ்ச்சங்கத்து நூற்பரிசோதகர் சே. ரா. சுப்பிரமணியக்கவிராயரவர்கள், செந்தமிழ்ப்பத்திராதிபர் தி. ந. நாராயணையங்காரவர்கள், மஹிபாலன்பட்டிவித்வான் மு. கதிரேசச்செட்டியாரவர்கள், V. முத்துஸாமிஐயரவர்கள் M.A., L.T., (நாகபட்டினம் ஸ்கூல் டிப்டி இன்ஸ்பெக்டர்), சென்னை அடையாற்று நேஷனல் காலேஜ் தமிழ்ப்பண்டிதர் பண்டித அ. கோபாலையரவர்கள், கீழக்கரை ஸையதுமஹம்மது ஆலிம் புலவரவர்கள், M. அப்பாய் நாயுடு அவர்கள், P. R. ரங்கஸாமிநாயுடு அவர்கள், S. S. ஸ்ரீநிவாஸராகவ ஐயங்காரவர்கள், தமிழ்ச்சங்கக்கலாசாலையுபாத்தியாயர் பண்டித ஹரிஹரையரவர்கள், ஷை கலாசாலை உபாத்தியாயர் சு. நல்லசிவன்பிள்ளையவர்கள், பசுமலை ஹைஸ்கூல் தமிழ்ப்பண்டிதர் N. R. சுப்பிரமணியசர்மா அவர்கள், திருமெய்யம் ஹைஸ்கூல் தமிழ்ப்பண்டிதர் நெடுவை திரு. ராமஸ்வாமி ஐய்ங்காரவர்கள், மதுரை அமெரிக்கன்காலேஜ் தமிழ்ப் பண்டிதர் ஆ. கார்மேகக்கோனாரவர்கள், திருவையாற்று ஸம்ஸ்க்ருத கலாசாலைத்தமிழ்ப்பண்டிதர் சந்தானமையங்காரவர்கள், இராமநாதபுரம் மஹாராஜா ஹைஸ்கூல் தமிழ்ப்பண்டிதர் வி. திருஞானசம்பந்தக் கவிராயரவர்கள், கண்டரமாணிக்கம் தமிழ்ப்பண்டிதர் வ. மு இரத்தினேசுவரையரவர்கள், மதுரைக்காலேஜ் தமிழ்ப்பண்டிதர், சு. ஸ்ரீநிவாஸையங்காரவர்கள். ஸேதுபதிஹைஸ்கூல் தமிழ்ப்பண்டிதர் பண்டித அரங்கராமாநுஜபிள்ளையவர்கள், கோநகர்க் கற்பகவிநாயககலாசாலைத் தமிழ்ப் பண்டிதர் ஆழ்வாரையங்காரவர்கள், திருவரங்கம் T. சுதர்சனாசாரியரவர்கள் முதலிய உள்ளூர்வாசிகளும் வெளியூர்வாசிகளும் விஜயம் செய்திருந்தனர்.

முதலில் இராமநாதபுரம் மஹாராஜா ஹைஸ்கூல் தமிழ்ப்பண்டிதர் ஸ்ரீமத் திருஞானஸம்பந்தக்கவிராயரவர்களும், திருவையாற்று ஸமஸ்க்ருதகலாசாலைத் தலைமைத் தமிழ்ப்பண்டிதர் ஸ்ரீமத் சந்தானமையங்காரவர்களும் கடவுள்வாழ்த் துப்பாடினார்கள். பின்னர், தமிழ்ச்சங்கக்கலாசாலையுபாத்தியாயர் ஸ்ரீமத். பண்டித ஹரிஹரையரவர்கள், ஷை கலாசாலையுபாத்தியாயர் ஸ்ரீமத். சு. நல்லசிவன்பிள்ளையவர்கள் இயற்றிய மங்கல வாழ்த்துப்பாடலைப் படித்தார்கள், அதன்பின் மதுரை அமெரிக்கன்

காலேஜ் ஸம்ஸ்க்ருதபண்டிதர் ஸ்ரீமத் ராமநாதசாஸ்திரிகள் தாம் இயற்றிய ஸ்வாகதபத்திரிகையைப் படித்தார்கள்.

அதன்மேல் ஸபையாரின் சார்பாக, மாட்சிமைதங்கிய ஸேதுபதி மன்னரவர்கள், கனம் பரசுராமதாஸ் பாத்ரோ அவர்கள் தகுதியை எடுத்தியம்பி அவர்களை அக்கிராசனராயிருக்குமாறு வேண்ட, அவர்கள் அக்கிராசனத்தமர்ந்தார்கள். பின்னர் சங்கத்தின் கௌரவகாரியதரிசி ஸ்ரீமான் T. C. ஸ்ரீநிவாஸையங்காரவர்களால் ஸ்ரீமான்களான சென்னை C. P. ராமசுவாமி ஐயரவர்கள், மண்டபம் மரைக்காயரவர்கள், சிங்கம்பட்டி ஜமீந்தாரவர்கள், வடமொழிவியாசபாரதத் தமிழ்மொழிபெயர்ப்புப்பதிப்பாசிரியர் எம். வி ராமாநுஜாசாரியர், திருநெல்வேலி A. மஹாலிங்கையரவர்கள் (B A.), சென்னை திருவொற்றியூர் K. சதாசிவச்செட்டியாரவர்கள் (B.A.), K. C. வீரராகவையரவர்கள் (M A, L T), சென்னை பிரஸிடென்ஸிகாலேஜ் தமிழ்ப்பண்டிதர் இ. வை. அநந்தராமையரவர்கள், யாழ்ப்பாணம்வித்துவான் ஆ. சோமாஸ்கந்தபிள்ளையவர்கள், காரைக்குடி தனவைசியஊழியன் பத்திராதிபர் ராய. சொக்கலிங்கம்செட்டியாரவர்கள் முதலியோர் சங்கக்கொண்டாட்டத்துக்குவர முடியாமையை அறிவித்துத் தமிழ் நன்குசிறந்துவளம்பெறவும், சங்கக்கூட்டம் இனிதுநிறைவெய்தவும் பிரார்த்தித்து வாழ்த்தியனுப்பிய தந்திகளும் கடிதங்களும் சங்கத்தின் அறிக்கைப்பத்திரமும் படிக்கப்பட்டன

அதன்பின்னர் விஜயஞ்செய்திருந்த கனவான்களில் மஹாமஹோபாத்தியாய உ. வே. சாமிநாதையரவர்கள், மதுரைத்தலவிசேடத்தையும் கூடலென்பது சங்கத்துக்கு முற்காலத்தார் இட்டுவழங்கிய தமிழ்ப்பெயரென்பதனையும், ஸேதுபதிகள் புலவர்க்களித்த பெருங்கொடைகளையும், செந்தமிழ் அரியவிஷயங்கள்பலவற்றைப் பலர்க்கும் உதவியதென்பதையும், தற்காலக்கல்விமுறையிலுள்ள கேட்டினையும், முற்காலக்கல்விமுறையிலுள்ள நன்மையையும், தற்காலத்திற்கல்விபயில்வோர் பெரும்பாலும் பட்டத்தையும் பதவியையுமே கருதிக்கற்கின்றனரென்பதையும், சங்கத்திற்பயின்ற மாணவரின் திறமையையும் நன்குவிளக்கியும் சங்கத்தை மேலும் பலவழிகளிலும் அதிகாரிகள் அபிவிருத்தியடையும்படி செய்யவேண்டுமென்று வற்புறுத்தியும் பேசினார்கள்.

பின்பு, ஸேது ஸமஸ்தானவித்வான் ஸ்ரீமத். ரா. இராகவைய்யங்காரவர்கள், பாத்திரசப்தார்த்தத்தை விளக்கி, அது அவர்கள் பதவிக் கமைந்ததென்று காட்டி, அதற்கிசைய அறிவு ஆற்றல் உத்தியோகம் முதலியவற்றாற் சிறந்து விளங்கும் அக்கிராசனரின் தகுதியையும், அவர்களின் முன்னோர் நடையசிறப்பையும்நன்குவிளக்கி, அவர்களை அக்கிராசனராகத் தேர்ந்தெடுத்ததைப் பாராட்டிப்பேசி, தமிழ் அநாதியாயுள்ளதென்றும், சங்கம் பலவருணத்தாரும் ஏகீபவித்துக் கூடிய இடமென்றும், தமிழைவளர்த்த பாண்டியர்கள் மத்ஸ்யாவதாரத்துக்குமுன் இடிக்கொடியையுடையாராயிருந்தனரென்றும், அதன்பின் மீனக்கொடியுடையராயினரென்றும், பாண்டியரேபோலப் பின்னாளில் தமிழையும் தமிழ்ப்புலவர்களையும் ஆதரித்து வளர்த்த ஸேதுவேந்தர்கள் அறக்காவல் முதலியவற்றாலும் தலைசிறந்து விளங்கினார்களென்றும், தற்காலம் ஆங்கில கலாசாலைகளிலும் பிற இடங்களிலும் தமிழ்ப்பண்டிதர்களுக்கு மிகக் குறைந்தசம்பளமேகிடைக்கிறதென்றும், ஆங்கிலஉபாத்தியாயர்களுக்குக் கிடைக்கும் சம்பளம் தமிழ்ப்பண்டிதர்களுக்கும் கிடைக்கும்படி செய்ய வேண்டுமென்றும், அது தமிழ் அபிவிருத்தியடைதற்கு ஒருவழியென்றும், கனம் அக்கிராசனரவர்கள் தமிழும் தமிழ்ப்பண்டிதர்களும் அபிவிருத்தியடைதற்கு வேண்டியவற்றைச் செய்யவேண்டுமென்றும் தம் கருத்தை வெளியிட்டார்கள்.

பின்பு, சுவாமி விபுலானந்தர், இக்காலத்தார்போலன்றி முற்காலத்தார் பலரும் ஜீவனோபாயத்தின்பொருட்டு வேறுவேறு தொழிலுடையராய் ஆன்மார்த்தமாகப் பலநூல்களையும்பயின்று நிரம்பிய புலமையடைதலையே வழக்காறாக உடையாராயிருந்தனரென்றும், கௌரவத்தினிமித் தம் தமிழ்ப்பண்டிதர்களுக்குச் சம்பளத்தை அதிகப்படுத்தவேண்டுவது அவசியமேயென்றும், இதனால்மட்டும் தமிழ் அபிவிருத்தியடைந்துவிடாது, தமிழ் அபிவிருத்தியடையவேண்டின், எல்லாத்தொழிலாளரும், ஆங்கிலங்கற்று வேறு உத்தியோகத்துறையில் அமர்ந்துள்ளவர்களும், தமிழ்நூல்களைப் படித்துவரல்வேண்டும், தமிழ்நூல்கள் பலவற்றையும் படித்தற்கியலாதாயின், திருக்குறளொன்றையாவது முற்றக் கற்றல்வேண்டும், பிறநாட்டவர்களைப்போல நாமும் ஒருவரோடொருவர் எக்காலத்தும் எவ்விடத்தும் தமிழையே பேசிவரவேண்டுமென்றும் கூறினார்கள்.

பின்பு, மஹிபாலன்பட்டி வித்வான் மு. கதிரேசச்செட்டியாரவர்கள் முற்கால தற்காலக் கல்விமுறையிலுள்ள ஏற்றத்தாழ்ச்சிகளையும் அந்நாளில் அரசரால் புலவரும், புலவரால் அரசரும் நன்மையடைந்து வந்தமையையும் விளக்கி, தமிழ்ப்பண்டிதர்களுக்குச் சம்பளம் அதிகமாகக் கிடைக்கச்செய்து கௌரவிக்கவேண்டியது அவசியமேயாயினும் உயர்வு தாழ்வுகளுக்கும் இன்பதுன்பங்களுக்கும் அவரவர் மனநிலையும் தகுதியுமே காரணமென்றும் பேசினார்கள்.

அப்பால், கிழக்கரை ஸ்ரீமத். ஸையது முகம்மது ஆலிம்புலவரவர்கள், தாய்ப்பாஷையாகிய தமிழைத் தமிழரனைவரும் அவசியம் கற்கவேண்டுமென்றும், தமிழிலுள்ள அரிய நூல்களைக் கற்றவர்க்கு அந்நிய பாஷையிலுள்ள நூல்கள் எளிதில் விளங்குமென்றும் ஸ்வாநுபவங் கொண்டு நிருபித்துக்காட்டி அபிப்பிராயங் கூறினார்கள்.

அதன்பின் அக்கிராசனரவர்கள் சங்கப்பரீக்ஷைகளிற்றேறிய மாணவர்களுக்குப் பரிசுமுதலியனவளித்துச் சபையோர் மகிழுமாறு ஆங்கிலத்தில் ஒரு உபந்யாசமும் செய்தார்கள்.

அதன்பின், இச்சங்கத்தின் உபாக்கிராசனாதிபதியும், பெருங்கொடைவள்ளலும், ஆண்டிபட்டி ஜமீந்தாருமான திவான்பஹதூர் ஸ்ரீமான் சா. ராம. மு. சித. பெத்தாச்சிசெட்டியாரவர்களின் அகால மரணத்தைக் குறித்து இரங்கி அக்கிராசனரவர்கள் ஒரு அநுதாபத் தீர்மானத்தைப் பிரேரிக்க, மதுரை வக்கீல் ஸ்ரீமத் சோமசுந்தரபாரதியவர்களும், மஹிபாலன்பட்டி வித்வான் ஸ்ரீமத்கதிரேசச்செட்டியாரவர்களும் பெத்தாச்சிசெட்டியாரவர்கள் பேச்சுவன்மையையும் கொடைத்திறன் முதலியவற்றையும் வியந்து பாராட்டி அத்தீர்மானத்தை ஆமோதிக்கச் சபையோரனைவரும் எழுந்து நின்று அதனை அங்கீகரித்தனர்.

பின்னர் நெடுவை ஸ்ரீமத். திரு. இராமசுவாமி ஐயங்காரவர்கள் கடவுள்வாழ்த்துப்பாடவும் சங்கத்தின் நிர்வாகஸபையங்கத்தினரான மதுரை வக்கீல் ஸ்ரீமான். வி. எஸ். இராமஸ்வாமி சாஸ்திரிகள் அக்கிராசனர்க்கு வந்தனோபசாரங் கூறவும் இரவு 8 மணிக்கு ஸபை இனிது நிறைவெய்தியது.

கஙு-உ காலை 8½ மணிக்கு ஸபைகூடியது. ஸபைத்தலைவர் ஸ்ரீமான் பாத்ரோ அவர்கள் வேறுகாரியமாகச் சென்றுவரத் தாமதித்தமையால்

ஸபையார் வேண்டுகோளுக்கிசைந்து மஹாமஹோபாத்யாய உ. வே. சாமிநாதையரவர்கள் ஸபாநாயகராயிருந்தார்கள். ஸ்ரீமான்களான சந்தானமையங்காரவர்களும், நெடுவை. திரு. இராமசுவாமி ஐயங்காரவர்களும், திருஞானசம்பந்தக் கவிராயரவர்களும் கடவுள்வாழ்த்துப் பாடினார்கள். பின்னர் திருச்சி நாஷனல் காலேஜ் ஸ்தாபகருள் ஒருவராகிய ஸ்ரீமத் சுந்தரசாஸ்திரிகள் தாமியற்றிய மங்களஸ்லோகங்களைப் படித்துப் பொருள்கூறினார்கள். பின்னர் ஸபாநாயகரான கனம் பாத்ரோ அவர்கள் விஜயம் செய்ய அவர்களும் மஹாமஹோபாத்தியாய ஐயரவர்களும் ஸபாநாயகர்களாக இருந்தார்கள்.

அதன்பின், சென்னை லெக்ஸிகன் கமிட்டி தமிழ்ப்பண்டிதர் ஸ்ரீமத் மு. ராகவையங்காரவர்கள், தாம் எழுதிய தமிழரும் ஆந்திரரும் என்ற சிறந்த பொருளுரையைப் படித்து ஸபையோரைக் களிப்பித்தார்கள். அதன்பின் ஸ்ரீமத். V. முத்துஸாமி ஐயரவர்கள் M.A., L.T., (நாகபட்டினம் ஸ்கூல் டிப்டி இன்ஸ்பெக்டர்) தாம் இயற்றிய மங்களவாழ்த்துப் பாடலைப் படித்தார்கள். பின்னர், ஸபாநாயகரான கனம் பாத்ரோ அவர்கள் வேறுகாரியார்த்தமாய் வெளியே செல்லநேர்ந்தமையால் வந்த ஞபசாரத்துடன் விடைபெற்றுக்கொண்டார்கள்.

அதன்பின்னர், சென்னை ஸ்ரீராமகிருஷ்ணமடத்தைச்சேர்ந்த ஸ்ரீவிபுலானந்தசுவாமிகள் 'ஷேக்ஸ்பியரும் தமிழ் நாடக இயலும்' என்ற விஷயமேற்கொண்டு, தொல்காப்பிய முதலிய நூல்களிலிருந்து நாடக இலக்கணங்களை எடுத்து விளக்கி, அதற்குதாரணமாக ஷேக்ஸ்பியர் இயற்றிய நாடகங்களினின்றும் விஷயங்களை விளங்கக்காட்டியும், தமிழில் நாடகவிலக்கணநூல் நிரம்பியிருந்தும் இலக்கியங்கள் இல்லாதிருத்தலையும், ஆங்கிலத்தில் இலக்கணங்களில்லாதிருக்க இலக்கியங்கள்நிரம்பியிருத்தலையும் நன்கு புலப்படுத்தியும் உபந்யாஸத்தை முடித்தார்கள்.

பின்னர் அக்கிராசனரான மஹாமஹோபாத்தியாய ஐயரவர்கள் ஸபையிற் படிக்கப்பட்ட வியாஸத்தையும் உபந்யாஸத்தையும் பாராட்டி அவற்றைச் செந்தமிழில் வெளியிட்டால் பலர்க்கும் பயன்படும் என்று உவப்புரைகூற, 11½ மணிக்குக் காலைக்கூட்டம் நன்கு நிறைவெய்தியது.

அன்று பிற்பகல் 4½ மணிக்கு மஹாமஹோபாத்யாய ஐயரவர்கள் ஸபாநாயகராயிருக்கமறுபடியும் ஸபைகூடிற்று. முதலில் ஸ்ரீமத் சந்தான

மையங்காரவர்கள் கடவுள்வாழ்த்துப் பாடினார்கள். அதன்பின் ஸேது ஸமஸ்தான வித்வான் முத்துஸாமி ஐயங்காரவர்கள் மாணவரும், தமிழ், தெலுங்கு, கன்னடம், ஸம்ஸ்கிருதம், ஆங்கிலம் முதலிய பலபாஷைக ளிற் சிறந்தபயிற்சியுள்ளவரும் ஆகிய மைசூர் ஸ்ரீமத் R. நரஸிம்மாசாரி யர் இக்கூட்டத்திற் படிக்கும்படி அனுப்பிய கன்னடகவிகளின் ஜீவிய சரித்திரம் என்ற ஆங்கிலப்புத்தகத்தின் முகவுரையின் ஒருபகுதி சங் கத்தின் கௌரவகாரியதரிசி ஸ்ரீமான் T. C. ஸ்ரீநிவாஸையங்காரவர்க ளாற் படிக்கப்பட்டது.

அதன்பின்னர் ஸேதுஸமஸ்தானவித்வான் ஸ்ரீமத். ரா. இராகவை யங்காரவர்கள் இயற்றிய புவியெழுபது என்னும் செய்யுணூலிலிருந்து இடையிடையே பலகவிகளை இராமநாதபுரம் மஹாராஜா ஹைஸ்கூல் தமிழ்ப்பண்டிதர் ஸ்ரீமத் திருஞானசம்பந்தக்கவிராயரவர்கள் படிக்க ஐயங்காரவர்கள் அவற்றின் பொருளை இனிதுவிளக்கினார்கள். முதலில் ஐயங்காரவர்கள், பல தமிழ்ச்சொற்கள் பின்லண்டு எகிப்து முதலிய வெளிநாடுகளில் உருவம் சிறிதும் வேறுபடாமல் வழங்கிவருவதை நிரூ பித்துத் தமிழுக்கு உலகபாஷை யென்றும், வடமொழிக்குத் தேவ பாஷையென்றும் பெயர் வழக்குண்டென்றும், உலகத்தை உலகபாஷை யால் துதிக்கவே இந்நூல் எழுந்ததென்றும்; இதுவே இதன்வரலா றென்றும், பூமிக்கு ஆகர்ஷணசக்தியுண்டென்பதை நியூட்டன் கண்டு வெளியிட்டான் என்பது தவறென்றும், இவ்விஷயத்தை ஹிந்துக்கள் நெடுங்காலத்துக்குமுன்னே அறிந்தவர்களென்றும், இது, அவர்கள் பூமிக்கு இட்டுவழங்கும் பெயர்களுள் ஒன்றாகிய ஹ்ரீ என்னுஞ் சொல்லை ஆராய்வார்க்கு நன்குவிளங்குமென்றும் ஸபையோர் வியக்குமாறு உபந்யசித்தார்கள்.

அதன்பின் ஸபாநாயகரவர்கள் ஸபையிற் படிக்கப்பட்ட வியாஸத் தையும் உபந்யாசத்தையும் பாராட்டி அபிப்பிராயங்கூறினார்கள். பின்னர், சங்கக்காரியநிர்வாகக்கூட்டம் நடைபெற்றது. (அதிற்செய்யப்பட்ட தீர்மானங்கள் இதன்பின் சேர்க்கப்பட்டுள்ளன) பின்னர், சங்கத்தின் கௌரவகாரியதரிசியாகிய ஸ்ரீமான். T. C. ஸ்ரீநிவாஸையங்காரவர்கள் அக்கிராசனர்க்கும் ஸபையோர்முதலிய பிறர்க்கும் வந்தனோபசாரங்கூறக் கடவுள் வாழ்த்துடன் இரவு $8\frac{1}{2}$ மணிக்கு மதுரைத்தமிழ்ச்சங்கத்தின் இருபத்திரண்டு இருபத்துமூன்றும் வருஷக்கொண்டாட்டம் இனிது நிறைவெய்தியது.

உ

ஆசிரியர் நல்லந்துவனுர்காலம்.

*தஞ்சைமாநகரிலே வாழ்ந்துவந்த ஸ்ரீமத். மு. ஆபிரகாம் பண்டிதர் தமது சங்கீதரத்நாகரம் என்னும் நூலில் தமிழ்மக்கள் இசையில் வல்லவராயிருந்ததோடு சோதிடத்திலும் வல்லவர்களாயிருந்தனர் என்று எழுதி அதற்கெடுத்துக்காட்டாகப் பரிபாடல் 11-ம் பாட்டின் முற்பகுதியையும் பதிப்பித்தார்கள்

தஞ்சைக் கலியாணசுந்தரம் ஆங்கிலப்பாடசாலைச் சமஸ்கிருத பண்டிதர் ஸ்ரீமத். S சுப்பிரமணியசாஸ்திரிகள் அதனைப் படித்தபின்னர் அவர் எழுதியவற்றுள் தற்கால சோதிடக் குறிப்புகட்கு ஒற்றுமைப் படாதவைகளை எடுத்துக்கொண்டு அதற்கு ஆதாரமாக, ஆசாரிய வராக மிஹிரரால் எழுதப்பட்டதொரு அரைச்சுலோகத்தையும் அதற்குப் பட்டோத்பலர் எழுதிய விரிவுரையையும் அவர்கள் பெயரைக்குறியாமல் எடுத்துக்காட்டியதோடு தமிழ்மக்கள் சோதிடத்தில் அறியாமைமிகுதியு முடையரென்று சொல்லாமற்சுட்டிச் செந்தமிழ் 16-ம் தொகுதியில் (309-312 பக்கங்களில்) எழுதிவிடுத்தார்கள்.

அதன்பின்னர் யான் இப்பரிபாடலிற் கண்ட சோதிடக்குறிப்புக்கள் ஆசிரியர்கூறியவாறு இருத்தல் இயலுமென்றும், ஆசிரியர் நல்லந்துவனுர்கூறிய கோணிலைகளிலுள்ள தனிப்பகுதியான அகத்தியன் என்னுங் கோளைச் சுட்டியும், பொதுநெறியாகக்கூறி உண்டாய ஐயத்தை ஒருவாறு நீக்கிச் செந்தமிழ்த்தொகுதி கசு-ல் (249-255 பக்கங்களில்) எழுதினேன்.

இதனைக் கண்ணுற்ற தமிழ்ச்சங்கத்தின் கௌரவகாரியதரிசியும் தமிழ்ப்பேரபிமானியுமான ஸ்ரீமான் T. C. ஸ்ரீனிவாசையங்காரவர்கள் B.A., B.L., மதுரைவக்கீல் ஸ்ரீமத் R. S. நாராயணசாமி ஐயரவர்களைக் கண்டு மேற்கூறியவைகளைப்படித்துப்பார்த்துத் தமது அபிப்பிராயத்தை அப்பொழுது கூடுவதாயிருந்த சங்கத்தின் 20-ம் வருடக்கொண்டாட்டத்திற் கூறவேண்டுமென்று கேட்டுக்கொண்டார்களாம். அதன்மேல்

*முன்றொடர்பு புதிதாகப் பார்ப்பவர்கட்கு விளங்குவதற்காகவும், தொடர்ச்சியை முன்னிட்டும் மிகச் சுருக்கி கூறப்படுகிறது.

அவர்கள் அவ்வாண்டுவிழாவின்போது தமிழணங்கே உருவாய ஸ்ரீமத் மகாமகோபாத்யாய வே. சாமிநாதையரவர்களது தலைமையின்கீழ்க் கூடிய கூட்டத்தில் (1) அகத்தியன் என ஒருகோள் இல்லையென்றும் அஃதில்லையாகவே அதற்குச் சஞ்சாரமுமில்லையென்றும் (2) பண்டித சுப்பிரமணியசாஸ்திரிகளின்கூற்றையொப்ப மற்றைக்கோள்களின்நிலையும் இயலாதன வெனவும் (3) அவை இயலுமென்றுகொண்டாலும் புலர்விடியலாகாதெனவும், (4) சிங்கத்தில் அருக்கன் நிற்கக் கும்பத்திற் சோமனிருந்தாற்றான் பூரணையுண்டாகுமென்றும், ஆகவே இது எலாத தொன்றும் என்றும் வாதித்தார்கள்.

ஆண்டிருந்த செந்தமிழ்ப்பத்திராசிரியரும் தமிழ்ச்சங்கக்கலாசாலைத் தலைமைஉபாத்தியாயரும் வேதாங்கவிற்பன்னருமான ஸ்ரீமத் திரு. நாராயணையங்கார்சுவாமிகள், அவர்கள் வாதத்தை ஏற்றுப் பிரதியுத்தரமாக அகத்தியன் என ஒரு விண்மீன் உண்டென்றும், அதற்குரிய சஞ்சாரமுதலியவைகளை எடுத்துக்காட்டியும், பண்டித சுப்ரமண்ய சாஸ்திரிகளும் ஸ்ரீமத் நாராயணசாமிஐயரவர்களும் எடுத்துக்காட்டிய அரைச்சுலோகத்தை எடுத்துக்கொண்டு ஆராய்ந்து அதன் முற்பாகம் கொண்டு உரையிடல்வேண்டுமென்றும், மற்றைக்கடாக்களுக்கும் வேண்டுஞ் சமாதானம் அவையிற்கூறியும் அவைத் தலைவர் விருப்பப்படி செந்தமிழ்த்தொகுதி பத்தொன்பதில் (365-370 பக்கங்களில்) எழுதியும் விடுத்தார்கள்.

அவர்களைப் பின்பற்றியே அவையிலிருந்த ஸ்ரீமான் R. கணபதி ஐயரவர்கள் M.A., B.L., லும் சில சமாதானங்களைக் கூறியும் எழுதியும் விடுத்தார்கள். (செந்தமிழ்த்தொகுதி XIX பக்கம் 370-377.)

பின்னரும் ஸ்ரீமத் R. S. நாராயணசாமி ஐயரவர்கள், இக்கோணிலைகள் இயலாதனவெனவும், இருந்தாலும் இக்காலம் ஆடிமாதத்திலிருக்க வேண்டுமென்றும், இது கி. பி. 372-ம் வருடம் (கலி 3474 ஆடிமீ 15௨ யாக விருக்கவேண்டுமென்றும் காட்டிச் செந்தமிழ்த்தொகுதி 19-ல் (பக்கங்கள் 378—384-ல்) வெளியிட்டார்கள்.

இவற்றைக் கண்ட யான் அவர்கள் குறித்த நாள் கணிதத்திற்கு ஒற்றுமைப்படாதென்று எடுத்துக்காட்டியபோது அவர்கள், எழுதிய

கடிதத்தில் தாம் சென்னை அரசாங்க உத்தியோகத்தரான ஸ்ரீமத் திவான்பகதூர் சுவாமிக்கண்ணுப்பிள்ளையவர்கள் வெளியிட்ட இந்திய காலகணிதம் (Indian Chronology) என்ற புத்தகத்திற்காட்டிய கணக்கின்படி கணித்ததால் பிழையிருப்பினுமிருக்கலாமென்றும் எழுதி விடுத்தார்கள். பின்னர்ச் செந்தமிழ்த்தொகுதி 20-ல் (பக்கம் 182-188ல்), ஸ்ரீமத் நாராயணசாமி ஐயரவர்களும் பண்டித சுப்பிரமணிய சாஸ்திரி களும் எழுதிய அரைச்சுலோகம் பிருகத்ஜாதகத்தி லுள்ளதென்றும், அதன்மூற்பகுதி இதுவாகுமென்றும், அதன் முன்பின்றொடர்புகளைக் காட்டியும் ஆசாரிய வாராஹமிஹிரர்காலத்திலேயே இப்படிப்பட்ட ஐயங் கள் தோன்றிப் பூர்வாசார்யர்களுடைய சம்மத மிதுவாகுமென அவர்க ளே கொண்டனர்களென்றும் காட்டினேன். அப்பொழுதே ஸ்ரீமான் நாராயணசாமி ஐயரவர்கள் காட்டிய காலம் ஒவ்வாதென்றும் காட்டிய தோடு பின்னொருசமயம் இக்காலந்தான் யாதோவென ஆராய்வேனென் றும் எழுதினேன்.

இதன்பின்னர் இப்பொருளுரை உலகப்பிரசித்தமாகிவிட்டது சென்ற 1922-ம் ஆண்டுநடுவில், சென்னை அரசாங்கப்பெரும்பதவியாளர் திவான்பகதூர் L. D. சுவாமிக்கண்ணுப்பிள்ளையவர்கள் ரூபா 75 விலை யுள்ள சோதிட காலகணித மென்றொருநூலை அரசாங்க மூலமாக வெளி யிட்டார்கள். அதன் முதலாவது புத்தகத்தில் தமது கணித அட்ட வணையை ருசிப்பிக்கு முகத்தானே பரிபாடற் காலமென்று எடுத்துக் கொண்டு [பக்கம் 100-109-ல் 247–270 பகுதிகளில் (Paras)] ஆராய்ந்து, அந்தக்காலத்தில் ஆசிரியர் சுத்தஸ்புடம் என்னும் கோள் களின் உண்மை நிலைகளை யறிந்திரார் என்றும், மத்தியகதிகளையே (Mean Longitudes) அறிந்திருப்பார்களென்றும், இன்னும் பல ஐயங் களையும் வினுக்களையும் எழுப்பியும், அவற்றிற்குத் தாமே விடைகூறியும் இக்காலம் 17 6, 634 இருக்கவேண்டுமென்றும் எழுதி வெளியிட்டார் கள். சென்னைப் பல்கலைக்கழகச் சரித்திரப்போசிரியரான டாக்டர் S. கிருஷ்ணசாமி ஐயங்காரவர்கள் இதனை யொப்பாது கணிதசாஸ்திர நிபுணரான ஜர்மானியபண்டிதர் ஹெர்மான் யாகோப்பி (Herrman Jacobi) அவர்கட்கு எழுத அவர்களும் இக்காலத்தை யொப்பவில்லை யென்று தெரிகிறது. இதன்மேல், பெங்களூரில்நடைபெறும் மிதிக்

சங்க வெளியீட்டில் (Journal of the Mythic Society) ஸ்ரீமத் K. G. சங்கர ஐயரவர்கள் இக்காலம் பொருத்தமில்லையென்றும், கி.பி. 254 (கலி 3356) ஆகவிருக்கலாமென்றும் எழுதியிருப்பதாகவும் அறிகிறேன். இவ்விதமாக இது பொதுவிடயமாக ஆகிவிட்டதால் இதனை யாராய்ச்சிசெய்ய முற்பட்டேன்.

முதலாவதாக ஸ்ரீமான் L. D. சுவாமிக்கண்ணுப்பிள்ளையவர்களின்கூற்றைச் சுருக்கமாகவரைந்து அவற்றிற்கு விடையிறுத்து மேற்செல்லுவேன்.

247. ஐந்து (V. A.) என்ற வாய்பாடு பெருங்கோள்களான செவ்வாய், குரு, சனி இவர்களின் மத்தியஸ்புடத்தை 2000 வருடங்களுக்குக் காட்டுகிறது. இது ஆராய்ச்சியாளர்க்குப் பெரிதும் பயன்படும். இதனைத் தமிழர்களுக்கு மிக முக்கியமான ஒரு எடுத்துக்காட்டுமூலம் காட்டுவேன். பரிபாடலென்ற பழந்தமிழ்த்தொகைநூலை மகாவித்வானை மகாமகோபாத்யாய. வே. சாமிநாதையரவர்கள் சிறக்க அச்சிட்டு வெளியிட்டார்கள். இதன் காலம் விளங்காவிடினும், அதனிலுள்ள பதினொராம் பாடலால், மதுரைக்கருகில் ஒரு பெருவெள்ளம்வந்ததை அறிகிறோம். இதனாசிரியர் சங்கப்புலவரென்று நம்பப்படுபவரும் கலித்தொகையைத் தொகுத்தவருமான (ஆசிரியர்) நல்லந்துவனாரவர். இவர் சந்திரகிரகணமுண்டான ஒருநாட்காலையில் வானில் கார்த்திகை உச்சமாகும்போதும், செவ்வாய் மேஷத்திலும், குரு மீனத்திலும், சனி தனுசிலுமிருந்து மகரத்துக்குச் செல்லும்போதும், சுக்கிரன் ரிஷபத்திலும், புதன் மிதுனத்திலும் நிற்க, வைகையில் வெள்ளம்வரக்கண்டார்.

248 இப்பாட்டிலிருந்து எடுக்கப்பட்ட இவ்வரிகள் உண்மையில் ஒரு சாதகக்குறிப்பேயாம். ஒருகுழந்தை பிறந்ததின்குறிப்பாயிராவிடினும், இது ஒரு காலக்குறிப்பேயாகும். இக்காலக்குறிப்பை யாராய்வது கடினமாக இருப்பதுடன் அநேக இடையூறுகளும் தோன்றுகின்றன.

முதலாவதாக இக்குறிப்பு வெகு புராதனமானதாகவிருந்தால் (I)* புலவர் மத்தியஸ்புடம்தான் அறிந்திருக்கவேண்டும். அதனோடு வானிற்றோன்றிய கிரகநிலையையும் உற்றுநோக்கியிருக்கலாம்.

---

* உரோமனெண் இட்டிருப்பது முடிவில் எடுத்துக்காட்டுவதற்கு அநுகூலமாக விருப்பதற்கே,

ii. இக்கோணிலைகளெல்லாம் தமிழ்ப்பாவிலே யமைக்கப்பட்டிருக்கின்றன. இப்பாஷையின்மொழிநயத்தால் அப்பாவின்பொருளை யறிவது எல்லோர்க்கும் எளிதன்று. நற்காலமாகத் தெய்வப்புலமைவாய்ந்தஆசிரியர் திருவள்ளுவரது திருக்குறளுக்கு உரை எழுதிக் கீர்த்திவாய்ந்த ஆசிரியர் பரிமேலழகர் இதற்கும் உரை எழுதியுள்ளார். முப்பால் முதலாய இலக்கியங்கட்கு எழுதிய உரையால் இலக்கியத்தில் நுண்ணறிவுடையாரென்பதுபோன்று சோதிடத்திலும் இவர் வல்லவரென்றேகொள்ளலாம்.

iii. சாந்திரமானமாதமாவது சூரியனது நிலையாவது செய்யுளில் ஆசிரியாற் குறிக்கப்படவில்லை. ஆனால் 26·7° க்கும், 40 பாகைக்கும் நடுவணுள்ள கார்த்திகை உச்சமாகப் புலர்விடியல் என்பதால் (II) ஆசிரியர் பரிமேலழகர் சூரியன் 116.7° க்கும் 130° பாகைக்கும் நடுவில் இருக்கவேண்டுமென ஊகிக்கிறார். அப்படியாயின் சூரியன் சிம்மராசியிற்புகுந்து சிலநாட்களே சென்றிருக்கவேண்டும். இதுவே உரையாசிரியர்வாக்கு.

iv. சூரிய சந்திரர்கள் நிற்கும்ராசியைக் குறிக்கக்கூடியகுறிப்பொன்றிருப்பதை உரையாசிரியர் ஊன்றிநோக்கிக் குறிக்கின்றார். அதாவது சிராவணமாத (ஆவணி) சந்திரகிரகணமாகையால் சந்திரன் அவிட்டத்தில் இருக்கவேண்டும். சந்திரனுக்கு 180 பாகையிற் சூரியனிருந்தாற்றான் கிரகணமுண்டாகுமாகையால் சூரியன் 113·30° முதல் 127 பாகைக்குள் இருக்கவேண்டும். ஆவணியிலும் 7 தேதிக்குமேற் சென்றிருக்க வியலாது. சூரியன் சிம்மத்திலும், சந்திரன் அவிட்டத்திலும் (III) இருக்கின்றனரென்று சொல்வதற்குள்ள ஓரோவொரு குறிப்பான புலர் விடியல் அங்கி என்பதைக் கணிகள் பலமாக ஆக்ஷேபிக்கக் கூடும். ஆனால் பழமைவாய்ந்த உரையாசிரியரான பரிமேலழகர் இவ்விஷயத்தில் யாதொரு ஐயமுமுறவில்லை.

v. உரையாசிரியர்கொள்கை யுண்மையானால் சூரியனது நிலையையும் (120° –127°) புத (60° –89°) சுக்கிரர் (30° –59°) களது நிலையையும் பார்க்கும்போது ஆசிரியர் (நல்லந்துவனார்) கிரகங்களின் சுத்தஸ்புடநிலைகளை (உண்மைநிலை Actual Position) நினைத்திரார் என்று ஊகிக்கலாம். இக்கோள்களின்

நிலையே இப்பாட்டிலுள்ள சிக்கலுக்கு மூலம். இதைப்பற்றிப் பின்னர்க் கவனிப்போம்.

vi. இப்புத்தகத்தில் (பிள்ளைய்வர்கள் கணிதபுத்தகம்) கொடுக்கப் பட்ட கிரகங்களின் சீக்கிரமந்தகதிகளைப்பார்ப்போமாயின், புதன் 26 பாகைக்கு மேலும் சிக்கிரன் 43·3 பாகைக்குமேலும் செல்வதில்லையென்பதுபுலப்படும். ஆசிரியரோ சுக்கிரனுக்கு60 பாகையும், புதனுக்கு30பாகையும் கொடுக்கிறார். ஆகையால், சுக்கிரன் நிலையைக்கொண்டுஆசிரியர் மத்தியகதியையே குறித்துளார் என்பது விளங்கும். அப்படியாயின், மற்றவைகட்கும் மத்தியகதி தானே குறித்திருக்கவேண்டுமென்று ஏற்படுகிறது.

249 vii. கிரகநிலைகளை ஆசிரியர் தாம் ஆகாயத்திற் கண்டபடியும் குறித்திருக்கலாம். ஒருவேளை சிலவற்றை நோக்கியும் சிலவற்றைத் தமது கணிதப்பயிற்சியாற் கணித்து மிருக்கலாம். (IV) எவ்வாறாயினும் முன்னர்க் கூறியதுபோலச் சுக்கிரனைமாத்திரம் இவர் கண்ணாரக் கண்டிருக்கவியலாது.

250. இவ்விதமாக இந்த எழுவகை இடையூறுகளையுங் கண்டதாலே இவைகளை V ல வாய்பாடுமூலமாக நீக்கமுயலுவாம். இதற்குமேல், செவ்வாய், குரு, சநி இவர்களுக்கு வாய்பாடு கொடுக்கப் பட்டிருக்கிறது. [இது 251, 252-வது பகுதிகள்வரை செல்லுகிறது.] புத சுக்கிரர்களுக்கு வாய்பாடு கொடுக்காத காரணம் அவர்களின் நிலை சூரியனைக்கொண்டு இருப்பதால் கொடுக்கப்படவில்லை. (V) அவைகளும் நமக்கு அவ்வளவு முக்கியமல்ல.

253.† நமக்குப் பெருங்கோள்களின் உண்மைநிலை [சுத்தஸ்புடம்] தெரிந்துகொள்வதற்கு அந்தமாதம் தெரிந்தாற் போதுமானதாகும். இக் கோள்களின் நிலையையும் மத்தியத்தையும் அறிந்து அவைகள் குறித்த இடத்தில் இருக்கின்றனவாவெனச் சோதிப்பது எளிதானகாரியமன்று. அங்காரகன்மட்டிலும் காலத்துக்குத் தக்கபடி மத்தியஸ்புடத்திலும் சுத்தஸ்புடத்திலும் மிக்க மாறுபாட்டுடன் காணப்படும். நாம் கொடுத்திருக்கிற அங்காரக எண்களை உற்றுநோக்கின் ஒருஆண்டின் 130-வது நாளில் செவ்வாய் சுத்தஸ்புடம்மேஷமானால் அதன்மத்தியம் 320 முதல்

---

†251, 252 பகுதிகள் மேற்கூறிய நூலில் வாய்பாடுகளாகவிருப்பதால் அவற்றால் நமக்கு உபயோகமொன்றுமின்மையின் நீக்கப்பட்டன, முன்னரும் வாய்பாடுகளாக வருபவைகள் நீக்கப்பட்டன.

340 பாகைக்குள்ளிருக்கும். கி.மு. ஒன்றிலிருந்து தற்காலம் பிறக்க கி.மு. 1-க்குக் கண்ட எண்ணோடு 3+170 கூட்டவேண்டுமென்பதுமேலே காட்டிய வாய்பாட்டைப் பார்க்கப் புலனும். குரு, சநிக்கும் அவ்வாறே கொடுத்துள்ளோமாயினும் அவற்றின் வித்தியாசம் மிகக்குறைவாகவே காணப்படும்.

255. இனி, இவைகளின்படி பின்கண்ட ஆண்டுகளில் கோள்களின் மத்தியநிலை காட்டப்படுகிறது.

ஆண்டு	சந்திரகிரஹணம் பந்தமாதம்.	சௌரமான நாட்கள்.	செவ்வாய்	குரு	சநி
கி. பி. 17	சிராவண மாதம்	134	14	156	208
634	ஆஷாடம்	128	31	161	187
694	ஆசுவினம்	114	355	181	200
871	பாத்ரபதம்	135	54	153	203
931	கிரஹணமில்லை	131	358	173	216
1050	சிராவணம்	134	95	185	230
கி. மு. 160	சிராவணம்	...	–25	–176	–156
220	மேமாதம்	...	–349	–196	–168
397	மே	...	–28	–168	–171
1572	கிரஹணமில்லை	...	–289	–186	–128

256. கி. மு. ஆண்டுகளில் எப்பொழுது கிரகணம் உண்டாயிற்றென்றும், பெருங்கோள்களின் நிலை யின்னதென்றும் கண்டுபிடிப்பது அசாத்தியமான காரியம். (VI.) அப்படியிருந்தும் கி. மு. 161 சிராவண மாதத்தில் கிரகணமிருந்திருக்கிறது. ஆனல் அங்காரகனுடைய மத்தி

யத்தைக் கவனிக்கும்போது அதன் சுத்தஸ்புடம் மேஷத்திலிரா தென்று நன்கு புலப்படும். மற்றைய கி. மு. வருடங்களில் கிரகணங் கள் இல்லாமையால் அவற்றைப்பற்றி யாராய்வதிற் பயனில்லை.

258. உரையாசிரியரைநம்பிச் சந்திரகிரகணம் வந்ததென்பதை யொருகுறிப்பாகக்கொண்டு கி. பி. வருடங்களைச் சோதிப்போமானால் கி.பி. 17 (வர்த்தமான கலி 3119) ஒன்றே பரிபாடற்காலத்துக்கு ஒத்துக் காணப்படும். இந்த வருடத்தை யொப்புக்கொள்ள வெகுபேர் சம் மதியார்களென்பது திண்ணம். இந்தவாண்டிலும் அங்காரகன், குரு, சநிகளின் உண்மைநிலை (சுத்தஸ்புடநிலை) வெகுதூரத்தி லிருந்ததென் பது காணப்படும். முன் 237–239 பகுதிகளில் கொடுக்கப்பட்டிருக் கும் குறிப்புக்களைக்கொண்டாவது V A, V B வாய்பாடு மூலமாக வாவது செவ்வாய் மேஷத்திலும் 25·5°, குரு 334° மீனத்தில் 4 பாகை யும், சநி 274·1° மகரத்தில் 4 பாகையும் சென்றிருக்கின்றனவென்று தெரிந்துகொள்ளலாம். அதே தேதிக்குச் சுக்கிரமத்தியம் 28 பாகை யாக ரிஷபத்திற்கு இரண்டுபாகை குறைவென்று தென்படும். மத்தியஸ்புடம் இதுவாயினும் சுத்தஸ்புடம் மேஷமாவது ரிஷபமாவது ஆகாதென்று முன்னரே காட்டப்பட்டது. கி. பி 17-ம் ஆண்டு சிரா வணமாதம் அமாவாசையின்போது சுக்கிரன் 90·02-ல் அதாவது மிது னத்தின் கடையில் இருக்கிறான். புதமத்தியம் சிராவண பூர்ணிமையில் மிதுனத்திலும் சுத்தம் 156·02 லும் இருக்கிறது.

259. கி. பி. வருடங்களில் 17-ம் ஆண்டைத்தவிர 1050-ல் சிரா வணமாதத்திற்றான் கிரகணம் உண்டாயிற்று. அக்காலம் புதமத்தி யம் 95° சுத்தம் 92·57°. அதாவது கடகத்தில் மூன்று பாகை செல்லு. சுக்கிரனும் அப்படியே காணப்படுகிறது. ஆகையால் இதைப் பற்றி ஆராயவேண்டுவதில்லை.

260. ஆயிரத்தெண்ணூறு ஆண்டுகட்கு முந்திய தமிழர் என்ற நூலாசிரியரான வெ. கனகசபைப்பிள்ளை ஸ்ரீமத். A. குமாரசாமி இவர்கள் கொள்கைகளைப் பின்பற்றுபவர்கட்கு கி.பி. 17 (கதகலி 3118) தகுதியுடையதாகக் காணப்படினும், அக்கொள்கை டாக்டர் ஹுல்ஷால் தென்னிந்தியக் கல்வெட்டுக்கள் தொகுதி II பகுதி 3-ல் (பக். 370) செவ்வனே மறுக்கப்பட்டிருக்கிறது. (IX) அவர் (டாக்டர் ஹுல்ஷ்) இப்பொழுது காணப்படும் சங்கநூல்களெல்லாம் கி. பி. எட்டாம்நூற்

ருண்டிற் றேன்றியனவென்று கூறுவதே நமதுசந்தேகத்திற்குவிரோத மாக நிற்கிறது. இதனோடு இந்தியக்கணிகள் எப்பொழுது கோணிலை களைக் கணித்துச் சாதகக்குறிப்பு எழுத முற்பட்டனர் என்று சொல்வ தற்குரிய ஆதாரமொன்றும் காணப்படவில்லை. இதுவன்றித் (VII) தென்னிந்தியர் கிறிஸ்து பிறப்பதற்குமுன்னரே கலதேயர்களிட மிருந்து நேரே கிரகநடைகளை (கோள்சாரங்களை) அறிந்துகொண்டதால் இவைகளைத் திட்டமாகச் சொல்வதற்கில்லை. ஆனாலும், இத் தென் னிந்தியவாசிகளும் கி. பி. ஏழாம்நூற்றாண்டுக்குமுன்னர்ச் சாதகங் கள் குறிக்கவில்லையென்று திட்டமாகக் கூறலாம். மகா அலெக்ஸாந்தர் காலத்துக்கு முற்படாவிட்டாலும், அவர் காலத்திலிருந்தாவது பார்ப்பனரைவிட ஜயினசிரமணர்கள் வானசாத்திரத்தில் தாங்கள் வல்ல வர்கள் என்று சொல்லிக்கொண்டதாகக் காணப்படுகிறது. கி மு. 4-ம் நூற்றாண்டுமுதலே தென்னிந்தியாவில் சிரமணர்கள் அதிகமாகையால் அவர்கள் நூல்களிலிருந்து தென்னிந்தியர் கிரகசாரங்களையறிந்து கொண்டுமிருக்கலாம். இந்தியாவிலுள்ள மற்றைப்பகுதியினர்மாத்திரம் சாந்திரமானகணனப்படி நடக்கத் தமிழர்மாத்திரம் சௌரமான கணி தத்தைவிடாது பற்றிக்கொண்டிருப்பதுமாத்திரம் அவர்கள் வழக்கு வெகு புராதனமானதென்று கொள்வதற்கு இடம் தருகிறது. சில சௌரமான மாதப்பெயர்களும் தமிழர், தோடர், துளுவர்கட்குத் தனியா யிருப்பதோடு பிங்கலந்தையில் நட்சத்திரங்கட்குப் பல தமிழ்ப்பெயர்கள் இருப்பதும் கவனிக்கத்தக்கது.

261. கி. பி. 17-ம் ஆண்டையொப்புக்கொள்ளுமுன் சங்ககாலத் தை யாராயவேண்டியிருக்கிறது. குறள், சிலப்பதிகாரம், மணிமேகலை, சிந்தாமணி முதலாய நூல்களே சங்கநூல்களாகக் காணப்படுகின்றன. மற்றவை தொகைநூல்களாகத் தொகுக்கப்பட்டவை. (VIII) பல பாக் களைச்சேர்த்துத்தொகுத்திருப்பதாலாயே இப்பாக்களின் ஆசிரியர்காலத் தைச் சந்தேகிக்கவேண்டியிருக்கிறது. இவர்கள் பாடியவை முதலில் வெளிப்பட்டு நின்றுநிலவிச் சீரழிந்து கெட்டுப்போனபிறகே வழிவந் தோர் கிடைத்தவைகளைச் சேர்த்து வெகுகாலத்திற்குப்பின் தொகுத் திருக்கவேண்டும்.

262. பரிபாடலைப்பற்றியோவெனின், அதன் பதிப்பாசிரியரே இதனையச்சிடுவதற்கு இரண்டே ஏடுகள் கிடைத்தனவென்றும், அவை

களும் முற்றுப்பெறுதனவென்றும் எழுதுகின்றார்கள். மிகுதி கிடைக்குமோவென்பது சந்தேகமே. ஆயினும் பரிபாடலிற்காணப்படும் சைவ வைஷ்ணவ விடயங்களைக் கண்ணுறின், டாக்டர் பண்டாரகர் முதலிய கீர்த்திவாய்ந்த ஆசிரியர்களது கொள்கைகளின்படி இவை (சைவவைஷ்ணவ சம்பிரதாயங்கள்) கி. பி. முதலிரண்டுநூற்றாண்டுகட்குப் பிற்பட்டவை என்பது தெளிவாம்.

263. இதுகாறும்கூறியவிடயங்களில் உரையாசிரியரான பரிமேலழகருக்குப் பெருமைகொடுத்தோமாயினும், சுக்கிரனை அதோகதியில் விட்டோம். புதனைச் சற்றேனுங் கண்ணெடுத்துநோக்கினோமில்லை. அதுவுமன்றி கி.பி. 17-ல் கிரகணம் காலையிலில்லை. 27—7—17 மாலை 7-மணிக்குக் காணப்படுகிறது. இது முதற் குறையாக நிற்கிறது. உரையாசிரியரோ கார்த்திகையானது இரவுசென்று விடியும்போது உச்சியிலிருக்க என்கிறார். இப்பொழுது, ஒல்லை என்கிறார்; முதனாளிரவு முன்னேரமாகவிருந்தால் இவ்விதம் கூறார்.

264. ஆகையால் உரையாசிரியரும் நம்மைப் போலவே ஏதோ ஒரு நாளைத் தீர்மானிக்க முயல்கிறார் (X). நாம் இப்பொழுது கணித்துள்ள வாய்பாடுகள்போன்று அந்நாளில் அவருக்குக் கிடையாது. ஆவணி மாதமென்றும், புதன் மிதுனத்திலென்றும், சுக்கிரன் இடபத்திலென்றும் ஊகித்துக்கொண்டார்.

265. கணிதத்தின்பொருட்டு உரையாசிரியர்போன்றோரது அபிப்பிராயங்களை நிராகரிப்பது ஆபத்துக்கிடமேயாயினும், கணிதமுறையில் எல்லாவழிகளிலும் தேடிப்பார்த்தும் ஒன்றும் பயன்படவில்லை (XI). ஆனால் உரையாசிரியர் பரிமேழலகர்தானோ இல்லையோவென்பது சந்தேகமாக விருக்கின்றது. (XII.)

266. சந்திரகிரகணம் ஆஷாடத்தில் (சூரியன் 90°) உள்ள ஒரு ஆண்டு கி.பி. 634 (கத கலி 3735) ஆகும் (XIII). அதாவது 634-ம் ஆண்டு ஜூலை மீ 17-ம் தேதி இந்தக் கிரகணம் உண்டானது சூரியோதய காலமாகும். இது கிரஸ்தாஸ்தமனமாகையால் நூலாசிரியர் சொல்லுகிற விதமாகவே காணப்படுகிறது. ஆயினும், இது விஷயத்தில் உரையாசிரியரைப் புறக்கணித்தவர்களாவோம். இவர் (உரையாசிரியர்) கணக்குப்படி கார்த்திகை உச்சத்திற்குவரச் சூரியன் 120 பாகையில் இருக்க வேண்டும். ஆனல் உயர் என்ற சொல்லுக்கு உச்சி என்றும் மேல்

என்றும் பொருளுண்டு. கிரகணங்களைக்காணுமுறை (L'art De Verifier Les Dates) என்னும் பிராஞ்சிய நூற்படி அன்று கிரகணம் $1\frac{1}{2}$ (ஒன்றரை) டிஜிட் உண்டாயிற்று. இது மதுரையில் விடியல் சுமார் $4\frac{1}{2}$ மணிக்குத் தெரியும். சந்திரன் கிரகணத்தால், மறைபடுவதால் நட்சத்திரங்கள் வெறுங்கண்ணுக்குப் புலப்படும். அப்பொழுது புலர்விடியல் என்பதும் பொருந்தும்.

268. மேற்குறித்த 17-6-634-க்கு ஆஷாடமாதம் பௌரணமி நாழிகை 60—0.

கோள்நிலை.

கோள்கள்:	செவ்வாய்	குரு	சநி	சுக்கிரன்	புதன்
மத்தியம்	331·92	330·83	262·41	296·23	371·56
சுத்தஸ்புடம்	16·12	339·53	265·51	41·53	70·38
நிற்கும்ராசிகள்	மேடம்	மீனம்	தநுசு	இடபம்	மிதுனம்

இந்த நாளைக் கொள்வதில் முன்னர்த் தென்பட்ட இடையூறுகள் பலவும் இலவாகின்றன. புதசுக்கிரர்கள் கூடவேண்டியநிலையில் இருக்கின்றனர். ஆனால் சனியோ தான் இருக்கவேண்டிய நிலைக்கு 13 பாகை குறைகிறான். (பரிபாடற்) செய்யுட்கு வில்விற்கடை என்றும், பின்னர் மகரம் செல்கின்றான் என்றும் பொருள்கொள்ளவேண்டும். ஸ்ரீமான் மாணிக்கநாயகர் கூறுகிறபடி விற்கடை என்றால் ஆசிரியர்கூற்றுப் பொருந்தும் (XIV). வில்விற்கடை என்பதால் மேற்கூறிய பொருள்தான் பொருத்தமானது. மற்றைக்கோள்கள் தத்தம் வீட்டிலிருப்பதால் சநியும் இருக்கவேண்டுமென்றது ஒற்றுமையுடையதென்றே கொள்ளலாம். கோள்கள் அவரவரது சொந்தவீட்டில் (சுவக்ஷேத்திரத்தில்) இருந்தால் ஜாதகன் பலவானென்று பலன்சொல்லப்பட்டிருக்கிறது. இப்பொழுது செய்துவரும்கணிதப்படி சநிக்குக் கணித்தால் கி.மு. 161ல் அவன் இருக்கவேண்டிய இடத்தைவிட ஆறு பாகை முன்னேசென்றிருந்தான் என்று தெரிகிறது. கி. பி. 900-ல் அவன் நிலை இப்பொழுதைய கணிதத்திற்கு ஒற்றுமைப்பட்டிருக்கிறது. கி. பி. 600-ல் 2·4 பாகை முன்சென்றான். ஆகையால் கி. பி. 634-ல் அவனுக்கு எவ்விதமாய்க் கணக்குச்செய்தனரோ அறியோம்.

269. ஆசிரியர் சூரியன் சிம்மத்திலிருக்கிறானென்று கூறினதாகத் தெரியவில்லை (XV). உண்மையாக அப்படியிருந்தால் அவர் கூறும

விரார். மேலும் கிரகங்கள் சுவக்ஷேத்திரத்தி லிருப்பதையோ செல்வதையோ குறித்திருக்கிறார். சந்திரன் தனுசில் 2·6 சென்றார் என்று காணப்படுகிறது.

270. இதுவரையிற் சொல்லியதுகொண்டு ஆசிரியர் சந்திரகிரகணத்தை நிச்சயமாகக்கொண்டபடியால் இந்த 634ம் ஆண்டுதான் ஆசிரியர்கூறிய காலமென்பதிற் றடையில்லை. இதுதானென்று காட்டுவதற்கு மற்றொருகுறிப்பு முண்டு. அது யான் சிலப்பதிகாரகாலம் கி. பி. 756 என்று குறித்திருப்பதாகும். இக்குறிப்பினாலும் பரிபாடற்காலம் 634 என்பது வலியுறுகின்றது என்பதாம்.

இவர்களின் கூற்றுக்களைச் சுருங்கக்கூறுமிடத்து:—

I. முன்னோர் மத்தியஸ்புடங்களை அறிந்திருந்தார்களேயொழியச் சுத்தஸ்புடங்களை யறியாரென்பது.
II. சிம்மத்தில் சூரியன் இருக்கவேண்டுமென்பது உரையாசிரியர் ஊகமென்பது.
III. அதற்குக் காரணம் கார்த்திகை உச்சத்தில்தோன்றியதொன்றே என்பது.
IV. இவர் காலப்படி புத சுக்கிரர் தென்பட்டிரார் என்பது.
V. இப்பாட்டுக்குப் புதசுக்கிரர் முக்கியமில்லையென்பது.
VI. கி. மு. 161 கவனிக்கவேண்டுவதில்லையென்பது.
VII. தென்னிந்தியமக்கள் கலதேயர்களிடமிருந்தும் சமணர்களிடமிருந்தும் இச்சாத்திரத்தை யறிந்தார்களென்பது.
VIII. தொகைநூல்களின் காலம் பிற்பட்டதென்பது.
IX. சங்ககாலமும் சிலப்பதிகாரகாலமும் எட்டாம் நூற்றாண்டென்பது.
X. உரையாசிரியரும் நம்மைப்போல் ஒருநாளைக் குறிக்கமுயன்றவரென்பது.
XI. உரையாசிரியர்கொள்கை ஒற்றுமைப்படவில்லையென்பது.
XII. உரையாசிரியர் பரிமேலழகர்தானோ இல்லையோவென்பது.
XIII. இக்காலம் கி. பி. 634 என்பது.
XIV. வில்லின்கடைமகரம் என்பது.
XV. நூலாசிரியர் சூரியன் சிம்மத்திலிருந்ததாகக் கூறவில்லை யென்பது முதலியவைகளாம்.

[தொடரும்]

இலக்கண்விளக்க பரம்பரை,

திருவாரூர்ச் சோமசுந்தரதேசிகன்.

உ

தனித்தமிழ்ப்பரீக்ஷைத்தேர்ச்சிக்குறிப்பு.

மதுரைத்தமிழ்ச்சங்கத்தார் ருதிரோத்காரி வூ பங்குனிமீ 26, 27, 28 (1924-வூ ஏப்பிரல்மீ 7, 8, 9)-ஆம் தேதிகளில் நடத்திய தனித்தமிழ்ப் பரீக்ஷைகளிற் றேறிப் பரிசும், யோக்கியதா பத்திரமும் பெறும் மாணாக்கர்களின் அபிதானபத்திரம்.

பண்டிதபரீக்ஷை.

2-வது வகுப்பு.

ஒழுங்கு நிர்.	ரிஜிஸ்டர் நிர்.	
1.	4.	ஞா. தேவநேசக்கவிவாணன், மிஷின் உயர்தரப்பாடசாலை, ஆம்பூர், வடஆற்காடு ஜில்லா.

பாலபண்டிதபரீக்ஷை.

2-வது வகுப்பு.

1.	18.	இ. ராசநாயகம்தங்கம்மாள், ஸ்ரீராமநாத வித்யாலயம், சுன்ணாகம், யாழ்ப்பாணம்.
2.	9.	ஆ. பொன்னுச்சாமி, தமிழ்ச்சங்கக் கலாசாலை, மதுரை.
3.	8.	வே. இராமநாதன், தமிழ்ச்சங்கக் கலாசாலை, மதுரை.
4.	14.	எஸ். ஸீதாராமையர், 198, கீழைச்சித்திரை வீதி, ஸ்ரீரங்கம்.

பிரவேசபரீக்ஷை.

1-வது வகுப்பு.

1.	24.	ஜ. ராஜுமுதலி, மதுரைத் தமிழ்ச்சங்கக்கலாசாலை, மதுரை (முதற்பரிசு ரூபா 50 பெறத்தக்க தங்கப்பதக்கம்).

2-வது வகுப்பு.

1	51.	ஈ. வெங்கட்டரமணையர், தமிழ்ப்பண்டிதர், வி. சி. செக்கண்டரி ஸ்கூல், ஓமலூர்.
2.	21.	S. M. R. சாமுவேல்தானியேல், மதுரைத் தமிழ்ச்சங்கக்கலாசாலை, மதுரை.
3.	19.	A. திருமலை, மதுரைத்தமிழ்ச்சங்கக்கலாசாலை, மதுரை.
4.	39.	A. பசுபதிஐயர், வடகுவீதி, பந்தநல்லூர் போஸ்டு.
5.	33.	சா. சிதம்பரம், கரந்தைத் தமிழ்ச்சங்கம், கரந்தட்டாங்குடி, தஞ்சை.
6.	20.	நாராயணன், மதுரைத் தமிழ்ச்சங்கக் கலாசாலை, மதுரை.
7.	22.	ரெ. அழகிரிசாமி, மதுரைத்தமிழ்ச்சங்கக்கலாசாலை, மதுரை.
8.	41.	அ. ராமசாமிநாதபிள்ளை, வேடம்பூர், ஆலங்குடி போஸ்டு.

B இராஜராஜேஸ்வர ஸேதுபதி,
அக்கிராசனாதிபதி.

18—6—24.

உ

ஆங்கிலத்தமிழ்ப்பரீக்ஷைத் தேர்ச்சிக்குறிப்பு.

மதுரைத்தமிழ்ச்சங்கத்தார் 1924-௵ மார்ச்சு௴ 8௳ நடத்திய ஆங்கிலகலாசாலைத் தமிழ்ப்பரீக்ஷைகளிற் றேறி யோக்கியதாபத்திரம் பெறும் மாணாக்கர்களின் அபிதானபத்திரம்.

பீ. ஏ. பரீக்ஷை.

2-வது வகுப்பு.

தொடர்ச்சி எண்.	ரிஜிஸ்டர் எண்.	
1.	2.	A. முத்துசாமிபிள்ளை. பிஷப் ஹீபர் காலேஜ், திருச்சிராப்பள்ளி.
2.	4.	T. M. அருணாசலம் ௸ ௸
3.	3.	A. V. சந்திரசேகரன் ௸ ௸
4.	5.	A. N. மகரபூஷணன், செயின்ட் ஜோஸப் காலேஜ், திருச்சிராப்பள்ளி.

எப். ஏ. பரீக்ஷை.

2-வது வகுப்பு.

1.	31.	M. முத்துசாமிபிள்ளை, செயின்ட் ஜோஸப் காலேஜ், திருச்சிராப்பள்ளி.
2.	70.	R. V. வரதராஜன், சேலம் முனிசிபல் காலேஜ், சேலம்.
3.	96.	N. கலியப்பெருமாள், மீனாக்ஷி காலேஜ், சிதம்பரம்.
4.	54.	A. ஜான்தேவசகாயம், சி. எம். கலாசாலை, திருநெல்வேலி.
5.	65.	கே. ஆர். இராதாகிருஷ்ணன், சேலம் முனிசிபல் காலேஜ், சேலம்.
6.	90.	T. நடேசன், மீனாக்ஷி காலேஜ், சிதம்பரம்.
7.	69.	V. S. வெங்கடாசலம், சேலம் முனிசிபல் காலேஜ், சேலம்.
8.	76.	V. கன்னையன், மன்னார்குடி பிண்டிலே காலேஜ். மன்னார்குடி.

9. 67. கே. எஸ். கிருஷ்ணமூர்த்தி, சேலம்முனிசிபல் காலேஜ், சேலம்.

10. 34. P. முத்துதனபாலன், கவர்மெண்ட் காலேஜ், கும்பகோணம்.

11. 61. எஸ். கோபாலையர், ஸ்காட் கிரிஸ்டியன் காலேஜ், நாகர் கோவில்,

12. 10. P. ஷண்முகம் அமெரிக்கன் காலேஜ், மதுரை.

13. 16. C. சங்கரலிங்கம், நாஷனல் காலேஜ், திருச்சிராப்பள்ளி.

14. 64. S. ஜாயிஸ் சமாதானம், (பெண்) H. H. The Maharajah's Collage for Women திருவனந்தபுரம்.

15. 86. K. அரங்கநாதன், மீனாக்ஷி காலேஜ், சிதம்பரம்.

16. 8. R. சுப்பிரமணியன், அமெரிக்கன் காலேஜ், மதுரை.

17. 35. K. சோமசுந்தரம், கவர்ன்மெண்ட் காலேஜ், கும்பகோணம்.

18. 18. T. R. ஸ்ரீனிவாஸன், நாஷனல் காலேஜ், திருச்சிராப்பள்ளி.

19. 45. T. M. பாஸ்கரன், ஹிந்து காலேஜ், திருநெல்வேலி.

20. 47. T. R. திருவாய்மொழிப்பெருமாள், ஷை ஷை

21. 7. V. தங்கசாமி, அமெரிக்கன் காலேஜ், மதுரை.

22. 94. S. நாராயணன், மீனாக்ஷி காலேஜ், சிதம்பரம்.

23. 60. பி. சுப்பிரமணியம், ஸ்காட் கிரிஸ்டியன் காலேஜ், நாகர் கோவில்.

24. 72. K. கல்யாணசுந்தரம், மகாராஜா காலேஜ், புதுக்கோட்டை.

25. 29. K. R. நடேசன், ஸெண்ட் ஜோஸப் காலேஜ், திருச்சிராப் பள்ளி.

26. 92. S. திருவேங்கடம். மீனாக்ஷி காலேஜ், சிதம்பரம்.

27. 52. க. மூக்காண்டி, ஹிந்து காலேஜ், திருநெல்வேலி.

28. 88. R அரங்கநாதன், மீனாக்ஷி காலேஜ், சிதம்பரம்.

மெற்றிக்குலேஷன் பரீக்ஷை.

2-வது வகுப்பு.

1. 441. S. மாணிக்கவாசகம், ஹைஸ்கூல், பத்தமடை.

2. 527. S. இராமகிருஷ்ணன், போர்டு ஹைஸ்கூல், நாங்குநேரி.

3. 328. S. சுயம்பிரகாசன், ஹைஸ்கூல், திருக்காட்டுப்பள்ளி.

4. 362. டி. எம். திருமலை, மன்னார்குடி, பின்டிலே காலேஜ்.

5. 226. T. T. சுப்பிரமணியன், சி. எம். காலேஜ், திருநெல்வேலி.
6. 227. P. K. பிரமநாயகம், சி. எம். காலேஜ், திருநெல்வேலி.
7. 287. D. V. ராஜம், செண்ட் ஜோஸப் ஸ்கூல், கூடலூர்.
8. 225. M. இசக்கிமுத்து, சி. எம். காலேஜ், திருநெல்வேலி.
9. 532. K. இராமன். போர்டு ஹைஸ்கூல், நாங்குநேரி.
10. 435. S. S. S. குருசாமி, இந்து நாடார் விக்டோரியா ஹைஸ்கூல், சிவகாசி.
11. 234. K. சுப்பிரமணியன், சி. எம். காலேஜ், திருநெல்வேலி.
12. 235. A. பிரமநாயகம், ஷை ஷை
13. 266. S. சவரிமுத்து, செண்ட்மைக்கல் ஹைஸ்கூல், கோயம்புத்தூர்.
14. 238. T. R. அழகியமணவாளன், சி. எம். காலேஜ், திருநெல்வேலி.
15. 327. P. S. நித்தியானந்தம், ஹைஸ்கூல், திருககாட்டுப்பள்ளி.
16. 439. A. S. சோமசுந்தரம், இந்துநாடார் விக்டோரியா ஹைஸ்கூல், சிவகாசி.
17. 228. R. கவிதீர்த்தபெருமாள், சி. எம். காலேஜ், திருநெல்வேலி.
18. 476. R. வரதராஜன், அமெரிக்கன் ஆற்காடு மிஷின்ஹைஸ்கூல், திண்டிவனம்.
19. 449. M. கோபாலகிருஷ்ணன், கவர்ன்மெண்ட் ஹைஸ்கூல், திருவாரூர்.
20. 457. R. ராஜாராமன், போர்டு ஹைஸ்கூல், நன்னிலம்.
21. 134. M. முத்துக்கருப்பையா, க்ஷத்திரியஹைஸ்கூல், விருதுபட்டி.
22. 445. P. ஸ்ரீநிவாஸன், கவர்ன்மெண்ட் ஹைஸ்கூல், திருவாரூர்.
23. 180. R. A. வையாபுரி, போர்டு ஹைஸ்கூல், லால்குடி.
24. 379. S. ருத்திராபதி, விக்டோரியா ஹைஸ்கூல், பாபநாசம்.
25. 259. M. இரத்தினசபாபதி, முனிசிபல் காலேஜ், சேலம்.
26. 216. T. K. உலகுமந்திரம், ஹிந்து ஹைஸ்கூல், திருநெல்வேலி.
27. 285. K. S. ஸ்ரீநிவாஸன், முனிசிபல் ஹைஸ்கூல், கூடலூர்.
28. 440 S. பொன்னு, ஹைஸ்கூல், பத்தமடை.
29. 334. Z. எலிசபெத், அமெரிக்கன்ஆற்காடு மிஷின் பெண்பாடசாலே, ராணிப்பேட்டை.
30. 233. S. சுப்பிரமணியன், சி. எம். காலேஜ், திருநெல்வேலி.
31. 472. கே. குப்புசாமி, முனிசிபல் ஹைஸ்கூல், விழுப்புரம்.
32. 390. M. A. சூசை அலங்காரம் முருயிஸ், அர்ச்சவேரியார் கலாசாலை, தூத்துக்குடி.
33. 375. S. T. சம்பந்தம், நாஷனல் ஹைஸ்கூல், மன்னார்குடி.

B. இராஜராஜேஸ்வர சேதுபதி,

13-6-1924. அக்கிராசனாதிபதி.

The Third All-India Oriental conference, Madras, 1924.

THE third session of the All-India Oriental Conference will be held in Madras during the Christmas holidays. His Excellency the Governor of Madras will open the Conference. Mahamahopādhyaya Dr. Ganganath Jha, M.A., D. LITT., Vice-Chancellor of the Allahabad University has accepted the Presidentship of the Conference.

THE Conference will last for three days. Papers offered for presentation to the Conference must reach the Secretary by the 1st of November next. A brief summary of the papers indicating the salient issues should be sent along with the papers. These summaries will be published if the paper should be accepted, for presentation to the members of the Conference for facility of discussion. The time allowed for each paper would be only 15 minutes. Scholars interested in the work of the Conference are invited to take part and submit their papers to the undersigned before the said date.

S. KRISHNASWAMI AIYANGAR,
Honorary Secretary.
(Sri Venkatesa Vilas, Nadu Street,
Mylapore, Madras.)

உ

நாளிது 1924-௵ டிசம்பர்௴ சென்னையில் நடைபெறும்

கீழ்த்திசைத் தொன்னிலையாராய்ச்சிக்கழகத்தின் அகில-இந்தியக்கூட்ட விளம்பரம்.

(The Third All-India Oriental conference, Madras, 1924.)

இக்கழகத்தின் மூன்றாவது கூட்டம் டிசம்பர்மாசப் பிற்பகுதியில் (கிறிஸ்ட்மஸ் விடுமுறை நாட்களில்) சென்னையில் மேன்மைதங்கிய சென்னைமாகாணக்கவர்னரவர்களது முன்னிலையில் ஆரம்பமாகும். அலகபாத் ஸர்வகலாசங்கத்தின் உதவித்தலைவராகிய மஹாமஹோபாத்யாய Dr. கங்காநாத்ஜா M.A., D. Litt., அவர்கள் சபாநாயகராயிருப்பார்கள்.

கூட்டம் மூன்றுநாள் நடைபெறும். கழகத்தின் முன்னிலையிற் படிக்கவிரும்பிய ஆராய்ச்சி வியாசங்கள் நவம்பர்மீ முதற்றேதிக்குள்ளாக கழகத்தின் கௌரவ காரியதரிசியாராகிய Dr. S. கிருஷ்ணஸ்வாமி ஐயங்கார், M.A., Ph.D., அவர்களுக்கு ஸ்ரீவேங்கடேசவிலாஸம், நடுத்தெரு, மயிலாப்பூர் சென்னை என்ற விலாசமிட்டு அனுப்பப்படல் வேண்டும். அனுப்பும் வியாசத்துடன் அதன்சுருக்கக்குறிப்பொன்றும் தனியாகஎழுதிச் சேர்க்கப்பட்டிருக்கவேண்டும். வியாசம் தக்கதென்று கொள்ளப்படுமாயின் சுருக்கக்குறிப்பு அச்சிடப்பட்டுக் கழகக் கூட்டத்துக்குவந்திருப்பவர்களுக்கு, அவர்கள், தங்களபிப்பிராயத்தை வெளியிடும்பொருட்டுவழங்கப்பெறும். ஒவ்வொருவியாசமும் பதினைந்து நிமிஷங்களுக்குட் படிக்கத்தக்கதாயிருக்கவேண்டும். இவ்விஷயத்தில் ஆராய்ச்சிசெய்யும்பண்டிதர்கள் இக்கழகம் மேன்மேலும் விருத்தியடையும்படி சிரத்தைசெய்வார்களாக.

1924 ஸ்ரீ ஜூன் மீ 26 உ (ரக்தாக்ஷி ஸ்ரீ ஆனி மீ 13 உ) வியாழக்கிழமைமாலை மதுரைச் சேதுபதி ஹைஸ்கூலிற் கூடிய மதுரைத்தமிழ்ச்சங்க மகாஸபையோரால் ஆலோசித்துத் தீர்மானிக்கப்பெற்ற விஷயவிவரக்குறிப்பு.

---

1 மாட்சிமைதங்கிய கனம் B. இராஜராஜேஸ்வர முத்துராமலிங்க ஸேதுபதி மன்னரவர்கள்,—சாசுவத அக்கிராஸனாதிபதி.

2 மகா-௱-௱-ஸ்ரீ மஹாமஹோபாத்தியாய உ. வே. சாமிநாதையரவர்கள்

3 ,, ரா. இராகவையங்காரவர்கள்

4 ,, மு. ராகவையங்காரவர்கள்

5 ,, திரு. நாராயணையங்காரவர்கள்

6 ,, ரா. சுப்பிரமணியக் கவிராயரவர்கள்

7 ,, மு. கதிரேசச்செட்டியாரவர்கள்

8 ,, சையத் முகம்மது ஆலீம் புலவரவர்கள்

9 ,, M. கோபாலகிருஷ்ணையரவர்கள்

10 ,, வே. முத்துஸாமி ஐயரவர்கள் M.A., L.T.,

11 ,, ஆ. கார்மேகக்கோனாரவர்கள்

12 ,, T. C. ஸ்ரீநிவாஸையங்காரவர்கள் B.A., B.L.,

13 ,, M. மாணிக்கவாசகம்பிள்ளையவர்கள் B.A., B.L.,

14 ,, V. S. ராமஸ்வாமி சாஸ்திரியவர்கள் B.A., B.L.,

15 ,, N. R. கிருஷ்ணஸாமி ஐயங்காரவர்கள், B.A., B.L.,

16	மகா-ா-ா-ஸ்ரீ	R. கணபதி ஐயரவர்கள், B.A., B.L.
17	,,	M. N. சேஷையரவர்கள்
18	,,	நெடுவை. திரு. இராமஸ்வாமி ஐயங்காரவர்கள்
19	,,	ஆழ்வார் ஐயங்காரவர்கள்
20	,,	V. M. இரத்தினேசுவரையரவர்கள்
21	,,	திருமலை ஐக்கையா அவர்கள்

இவர்கள் வந்திருந்தார்கள்.

மகா-ா-ா-ஸ்ரீ மஹாமஹோபாத்யாய உ. வே. சாமிநாதையரவர்கள் சபைத்தலைமை வகித்தார்கள்.

தீர்மானங்கள்.

1. இப்போதுள்ள நிர்வாக ஸபையாரில் மகா-ா-ா-ஸ்ரீ P. சுப்பராய ஐயரவர்கள் தவிர மற்றவர்களும் காரியதரிசிகளும் இன்னும் மூன்றுவருஷங்களுக்கு நிர்வாகஸபையங்கத்தினராக இருக்கவேண்டுமென்றும், மகா-ா-ா-ஸ்ரீ P. சுப்பராய ஐயரவர்களுக்குப்பதிலாக மகிபாலன்பட்டி வித்வான் மகா-ா-ா-ஸ்ரீ மு. கதிரேசச்செட்டியாரவர்கள் நிர்வாகஸபையங்கத்தினராக இருக்கவேண்டுமென்றும், மகா-ா-ா-ஸ்ரீ மு. இராகவையங்காரவர்கள் பிரேரேபிக்க மகா-ா-ா-ஸ்ரீ திரு. நாராயணையங்காரவர்கள் ஆமோதிக்க ஸபையோரால் அங்கீகரிக்கலாயிற்று.

2. வித்யாவிஷய ஆலோசனைஸபைக்கு இப்போதுள்ள எட்டு அங்கத்தினர்களுடன் மகிபாலன்பட்டி வித்வான் மகா-ா-ா-ஸ்ரீ மு. கதிரேசச்செட்டியார் அவர்களும் இன்னும் மூன்றுவருஷங்களுக்கு அங்கத்தினராக இருக்கவேண்டுமென்று மகா-ா-ா-ஸ்ரீ T. C. ஸ்ரீநிவாஸையங்காரவர்கள் பிரேரேபிக்க மகா-ா-ா-ஸ்ரீ N. R. கிருஷ்ணஸாமி ஐயங்காரவர்கள் ஆமோதிக்க ஸபையோரால் அங்கீகரிக்கலாயிற்று.

மதுரைத்தமிழ்ச்சங்கம்,
26—6—24.

வே. சாமிநாதையர்,
சபைத்தலைவர்.